வருடாந்த அறிக்கை
2021









புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்

வருடாந்த அறிக்கை

2021

சுற்றாடல் அமைச்சு

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்
இல 569, எப்பிட்டமுல்ல வீதி, பிற்றகோட்டே

தொலைபேசி : 011 2886289/ 011 2886290
தொலைநகல : 011 2886290

மின்னஞ்சல் : info@gsmb.gov.lk
வலைத்தளம் : www.gsmb.gov.lk

நோக்கு

“சமூக, கலாசார மற்றும் சுற்றாடல் விழுமியங்களை உறுதி செய்கின்ற அதேவேளை மக்களின் வாழ்க்கைத் தரத்தினையும் வாழ்வாதாரங்களையும் மேம்படுத்துவதன் பொருட்டு பூமி மற்றும் அதன் இயக்கவியல் என்பவற்றைப் புரிந்துகொண்டு முகாமை செய்வதன் மூலம் இலங்கையின் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்குப் பங்களிப்பு நல்குதல்”

நோக்குப் பணி

இலங்கையின் கனிம வளங்களின் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத்தை மேம்படுத்துதல் மற்றும் நாட்டின் நலனுக்காக கனிம வளங்களின் இயலாற்றல் உணரப்படுவதை உறுதி செய்தல் மற்றும் கனிமங்கள் திறமையான, பாதுகாப்பான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் பிரித்தெடுக்கப்படுவதை உறுதி செய்தல்.

உள்ளடக்கம்

நிறைவேற்று மதிப்பாய்வு

தலைவரின் மதிப்பாய்வு 6-7

பணிப்பாளர் நாயகத்தின் மதிப்பாய்வு 8-9

ஜீஎஸ்எம்பீ ஒரு பார்வையில் 10

SWOT பகுப்பாய்வு 11-12

எமது தலைமைத்துவம்

பணிப்பாளர் சபை 13-14

சிரேஸ்ட முகாமைத்துவம் 15-16

மூலோபாய நிலைப்படுத்தல்

ஜீஎஸ்எம்பீயின் எதிர்கால மூலோபாயங்கள் 17-18

மூலோபாய நோக்கங்கள் 19

மீள்நோக்கு

பணியகம் தொடர்பாக 20-21

வரலாற்றுப் பின்னணி 22

கோவிட் 19க்கான எங்கள் பதிற்செயற்பாடு 23

செயலாற்றுகை மற்றும் பெறுமதி உருவாக்கம்

புவிச்சரிதவியல் பிரிவு 24-38

சுரங்கப் பிரிவு 39-66

மனித வளப் பிரிவு 67-71

சட்டப் பிரிவு 72-75

நிதிசார் மீளாய்வு 76

நிதி அறிக்கைகள்

முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் 77-87

நிதிநிலை பற்றிய கூற்று 88

நிதிச் செயலாற்றுகை பற்றிய கூற்று 89

உரிமையாண்மையில் மாற்றங்கள் பற்றிய கூற்று 90

காசுப் பாய்ச்சல் கூற்று 91

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் 92-99

ஆளுகை மற்றும் இடர்கள்

நிறுவன ஆளுகை 100

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை 101-111

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைக்கான பதில்கள் 112-120

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு அறிக்கை 121-122

பெருநிறுவன சமூகப் பொறுப்புகள் 123-127

பணியகத்தின் தொடர்பு விபரங்கள் 128

தலைவரின் மதிப்பாய்வு

முதலாவதாக, 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையின் நிமித்தம் இச்செய்தியை முன்வைப்பதற்குக் கிடைத்துள்ளமையை நான் பெற்ற பெரும் கௌரவமாகக் கருதுகின்றேன். மேலும், 2021 ஆம் ஆண்டில் பணியகத்தின் இலக்குகளையும் கருத்திட்டங்களையும் ஏனைய அனைத்துப் பணிகளையும் நிறைவேற்றுவதில் அர்ப்பணிப்புடன் பணியாற்றிய புவிச்சரிதவியல், அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்க இதனை வாய்ப்பாகக் கொள்கின்றேன்.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மேதகு கோட்டாபய ராஜபக்ஷ அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட □சுபீட்சத்தின் நோக்கு□ கொள்கைப் பிரகடனத்திற்கு அமைவாக சுற்றாடல் அமைச்சுடன் இணைந்து சுற்றுச்சூழல் நெறிமுறைகள் மற்றும் மரபுகள் என்பவற்றுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் நிலையான சமூக-பொருளாதார முறைமையைக் கட்டியெழுப்புவதற்கு எங்களால் இயன்ற அளவில் பணியாற்றி வருகிறோம்.

கடந்த ஆண்டுகளைக் கருத்திற்கொள்கையில், 3,230 மில்லியன் ரூபா வருவாயை ஈட்டுவதன் மூலம் புளூஆடீ ஆனது 44மூ வளர்ச்சியைக் காட்டியுள்ளது. மேற்படி வருமானத்தில் 2000 மில்லியன் ரூபா பொதுத் திறைசேரிக்கு வழங்கப்பட்டுள்ளது.

எனவே, பயனுள்ள மற்றும் புத்தாக்கத்துடன்கூடிய கண்ணோட்டத்துடன் எங்கள் நிறுவனத்தை செயல்திறன்மிக்க ஒரு அரச நிறுவனமாக முன்னேற்றுவதற்குச் செயற்படுவதன் மூலம் இந்த ஆண்டில் 2021 ஐ விட ஈர்க்கக்கூடிய வளர்ச்சியைக் காண்பிப்பதே எங்கள் அடிப்படை இலக்கு ஆகும்.

அதன்படி, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க சதவீத பங்களிப்பை வழங்கவும், மொத்த உள்நாட்டு உற்பத்தியை (ஜிடிபி) மேம்படுத்தவும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.


அதற்கமைவாக, இலங்கையின் அனைத்து கனிம வளங்களையும் அடையாளம் கண்டு, அதன் நன்மைகள், கிடைக்கும் இடங்கள் மற்றும் தொடர்புடைய அளவுகள் குறித்து சரியான தகவல் கோவையை உருவாக்கி, இறுதியாக உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பட்டியலிடப்பட்ட கனிமங்களின் தற்போதைய மற்றும் எதிர்காலத் தேவைகளை ஆராய திட்டமிடப்பட்டுள்ளது. இதன் விளைவாக, எதிர்காலக் கருத்திட்டங்களின் வளர்ச்சிக்காக உள்நாட்டு மற்றும் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கவும், தொழில்துறையில் அதிக வாய்ப்புகளை உருவாக்கவும் முடியும்.

குறிப்பாக, நெருக்கடியின்றி பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்குவதற்காக ஊக்குவிக்கும் வினைத்திறன்மிகு தொழிற்பாட்டு செயன்முறை மற்றும் உத்தியோகபூர்வ நடைமுறைகளில் சிரமம் இல்லாத முறையான இணையவழி தீர்வை உருவாக்கி இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மையை வலுப்படுத்தும் திறமையான அரச நிறுவனமாக மாறுவதற்கு நாங்கள் அதிக கவனம் செலுத்துகிறோம்.

நாட்டின் விலைமதிப்பற்ற கனிம வளங்கள் பெரும்பாலானவற்றுக்குப் பொறுப்பான அரச நிறுவனமான எங்கள் நிறுவனத்தைப் பற்றிய பொது விழிப்புணர்வு கணிசமானளவு குறைவாக இருப்பதால், எங்கள் நிறுவனத்தில் நேர்மறையான மற்றும் தீவிரமான மறுசீரமைப்பை உருவாக்க பிரத்தியேக விளம்பர நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்கவும் திட்டமிடப்பட்டு வருகின்றது.

இறுதியாக, எமது எதிர்கால அபிலாஷை களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு எமது உறுப்பினர்கள் அனைவரும் தங்களின் மேலான ஆதரவை தொடர்ந்தும் வழங்குவார்கள் என்பதில் நான் மிகவும் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

டாக்டர்.செனரத் ஹேவகே
தலைவர்





பணிப்பாளர் நாயகத்தின் மதிப்பாய்வு

2021 ஆம் ஆண்டானது, பல வழிகளில், எங்கள் பணியகத்தைப் போலவே முழு உலகிற்கும் ஒரு தனித்துவமான ஆண்டாக அமைந்தது. இந்த ஆண்டானது புவிச்சரிதவியல், அளவை மற்றும் சுரங்கப் பணியகம் மற்றும் அதனுள் நாம் மேம்படுத்த வேண்டிய மற்றும் மேம்படுத்த விரும்பும் துறைகளில் உச்சப் பெறுபேறுகளை அடைந்த ஆண்டாக அமைந்தது.

எங்கள் சுரங்க வள வணிகத்திற்கான இல்லமாகிய புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினை நவீனமயமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் என்பவற்றுக்காக ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்ளுதல் உட்பட, எங்கள் உள்நாட்டு வாடிக்கையாளர்களையும் சர்வதேச வாடிக்கையாளர்களையும் வலுப்படுத்த மேலதிக நடவடிக்கைகளையும் நாங்கள் உருவாக்கி வருகிறோம்.

மேலும், எமது ஒட்டுமொத்த சிந்தனை, தீர்மானங்களை மேற்கொள்ளல் மற்றும் செயலாற்றுகை ஆகியவற்றை வலுப்படுத்தும் மிகவும் பரிபூரணமான அணுகுமுறையை உட்பொதிப்பதன் மூலம், உலகளவில் சமூகங்கள் மற்றும் பங்குதாரர்களுக்கான எங்கள் அணுகுமுறையை மேம்படுத்துவதில் உறுதியாக உள்ளோம். பணியகத்தில் பணியாற்றும் எங்கள் அனைத்து ஊழியர்களினதும் திறமை மற்றும் அர்ப்பணிப்பு மற்றும் எங்கள் சொத்துக்களின் தரம் மற்றும் சமூகத்திற்கு நாங்கள் வழங்கும் பங்களிப்பு ஆகியவை எதிர்காலம் குறித்து நம்பிக்கையுடன் இருக்க என்னைத் தூண்டுகிறது என்பதைக் கூறுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

கலாச்சார பாரம்பரியம் மற்றும் சமூகங்கள் மற்றும் சமூக செயலாற்றுகையில் எமது தலைமையை நிலைநிறுத்த, புளூஆடீ இன் 119 ஆண்டுகால நீண்ட வரலாற்றில் கட்டமைக்கப்பட்ட பலமும் திறன்களும் எம்மிடம் உள்ளன. மேலும், 2021 ஆம் ஆண்டில் நாம் கற்றுக்கொண்ட பாடங்களைக் கொண்டு எதிர்காலத்தில் ஒரு சிறந்த அரச நிறுவனமாக வெளிப்படுவோம் என்பதுடன் ஒரு நிறுவனத்தின் கலாச்சாரமே அதன் செயலாற்றுகை கட்டமைக்கப்படும் அடித்தளம் என நான் நம்புகிறேன்.

புளூஆடீ ஆனது கிட்டிய எதிர்காலத்தில் அதன் வலுவான பாதுகாப்புக் கொள்கைகளை வெளியிட எதிர்பார்க்கின்றது. 2020 வரை எட்டப்படாத ஒரு முக்கியமான மைல்கல்லாக இதனை அறிமுகப்படுத்த முடியும். அர்ப்பணிப்பு மற்றும் ஒப்பிய பொறுப்பு என்பவற்றின் மூலம் இதனை சாத்தியமாக்கிய பல நூற்றுக்கணக்கான ஊழியர்கள் மற்றும் பங்காளர்களுக்கு தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். எவ்வாறாயினும், முன்னணி கனிம கைத்தொழிலாளராக கருதப்படும் பிரதான அரச நிறுவனம் என்ற வகையில் எம்மால் மேற்கொள்ளப்பட வேண்டிய இன்னும் பல பணிகள் உள்ளன. எனவே, 2022 ஆம் ஆண்டில்

எங்கள் கவனம் ஆனது எமது பாதுகாப்பு முறைமைகளை மேலும் மேம்படுத்துவதில் இருக்கும் என்பதுடன் அது எங்கள் பாதுகாப்பு செயல்திறனில் ஒட்டுமொத்த முன்னேற்றங்களுக்கும் அதே நேரத்தில் எங்கள் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கும் வழிவகுக்கும்.

உலகளாவிய ஊழுஏஐனு-19 தொற்றுநோய் பரவிய காலப்பகுதியில் அதனை எதிர்கொள்வதில் நாங்கள் ஒரே குடும்பமாகப் பதிலளித்த விதம் பற்றி நான் மிகவும் பெருமைப்படுவதோடு இதன்போது எங்கள் ஊழியர்களையும் சமூகங்களையும் பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்கும் அதே நேரத்தில் எங்கள் செயற்பாடுகளை இயக்கி, எமது வாடிக்கையாளர்களுக்குத் தேவையான சிறந்த சேவையைத் தொடர்ந்து வழங்குவது எங்கள் இலக்காக அமைந்தது. உதாரணமாக, ஒரு சில நாட்களில், நாங்கள் வேலைமுறைப் பட்டியலை மீள்வடிவமைத்து, நூற்றுக்கணக்கான ஊழியர்களுக்கான எங்கள் வேலை அட்டவணையை மாற்றியமைத்தோம். சமூக இடைவெளி உள்ளிட்ட சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைந்தொழுகியதன் மூலமும் ஆயுர்வேத வழிகாட்டல்கள் போன்றவற்றைப் பின்பற்றுவதன் மூலமும் மேலதிக சுகாதார நடைமுறைகளை நாங்கள் உறுதி செய்துள்ளோம். பெரிய அளவிலான துரித பரிசோதனைகள் மற்றும் தடுப்பூசிகளுக்கு ஊழியர்களுக்கு ஆதரவளித்த முதல் உள்நாட்டு நிறுவனங்களில் நாங்களும் ஒன்றாகும். பெரும்பாலும் குடும்பங்கள் மற்றும் தமது அன்புக்குரியவர்களிடமிருந்து நீண்ட காலத்திற்கு விலகி இருப்பதன் மூலம் எங்கள் ஊழியர்கள் பலர் இந்த ஆண்டு குறிப்பிடத்தக்க தியாகங்களைச் செய்துள்ளனர். எமக்கு செயலூக்கத்துடன் உதவிய மற்றும் எமது செயற்பாடுகள் சுமூகமாக நடைபெற அனுமதித்த இலங்கை அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிக்க இச்சந்தர்ப்பத்தை ஒரு வாய்ப்பாகக் கொள்கின்றேன். இதனடிப்படையில், அரசாங்கத்திற்கு ஒரு பெரும் நிதி அனுகூலத்தை வழங்க முடிந்தது என நம்புகிறேன்.

இந்த ஆண்டில் உலகளவில் பணியாற்றியும் தொழில்துறையின் மேம்பாட்டிற்காக எங்கள் மேம்படுத்தப்பட்ட கனிம வளங்கள் மற்றும் வளங்கள் சார்ந்த புதிய இலக்குகள் மற்றும் குறிக்கோள்களின் மீது கவனம் செலுத்தியும் வருவாயை அதிகரிப்பதற்கான புதிய நோக்கெல்லையை நாங்கள் அமைத்து வருகிறோம். தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்களுடன் நாங்கள்

பணியாற்றுவோம் என்பதுடன் அது 2025 இலிருந்து காகிதப் பயன்பாட்டில் குறைந்தது 30மூ குறைப்பை ஏற்படுத்தும்.

மேலும், பணியகத்தின் அபிவிருத்தியில் மேற்கொண்ட குறிப்பிடத்தக்க பங்களிப்பிற்காக கௌரவ அமைச்சர் மகிந்த அமரவீர அவர்களுக்கும் பணிப்பாளர் சபைக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்க விரும்புகிறேன். அத்துடன், பல ஆண்டுகளாக எங்கள் பணியகத்திற்கு தங்களின் பெறுமதிமிக்க பங்களிப்பினை வழங்கிவரும் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். வரவிருக்கும் மாதங்கள் மற்றும் வருடங்களில் எங்கள் இலக்குகளை அடைய நாங்கள் ஒரு குழுவாக கடினமாக உழைக்க வேண்டியிருக்கும் என்றபோதிலும் நீங்கள் அனைவரும் திறமையானவர்கள் மற்றும் நாங்கள் எதிர்கொள்ளும் அனைத்து கடினமான சூழ்நிலைகளிலும் வெற்றிபெற முடியும் என நான் நம்புகிறேன்.

புவிச்சரிதவியல், அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் என்ற வகையில், எமது செயற்பாடுகள் பாதுகாப்பானதாகவும், வினைத்திறனாகவும் உள்ளதுடன் 2022 ஆம் ஆண்டிலும் அதனகத்துப் பின்னரும் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு உயர்தரமானதும் நம்பகமானதுமான சேவை வழங்கப்படுமெனவும் உறுதியளிக்கின்றேன். வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல் மற்றும் பிற உள்நாட்டு வணிகங்களுடன் கூட்டு சேரும் அதேவேளை, நிலையான புத்தாக்கங்களில் முதலீடு செய்யவும், எங்கள் வணிகங்களை வளர்க்கவும், அரசாங்கத்திற்கு வரிகள் மற்றும் பிற செலுத்த வேண்டிய தொகைகளைத் தொடர்ந்து செலுத்தவும் எதிர்பார்க்கிறோம். ஆயினும், எமது பல நூற்றுக்கணக்கான ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பு இன்றி இவை எதுவுமே சாத்தியமற்றது.

இறுதியாக, எமது வெற்றியை நிஜமாக்கிய இலங்கை அரசாங்கத்திற்கும், எங்களின் விசுவாசமான வாடிக்கையாளர்கள் மற்றும் பங்காளிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உங்களுக்கு நல்வாழ்த்துக்கள்.

பொறியியலாளர்.சஜ்ஜன டீ சில்வா
பணிப்பாளர் நாயகம்



ஜீஎஸ்எம்பீ ஒரு பார்வையில்

கனிப் பொருட்களை அகழ்தல், தோண்டுதல், ஏற்றியிறக்குதல், பதனிடுதல், விற்பனை செய்தல் மற்றும் ஏற்றுமதி செய்தல் என்பவற்றை ஒழுங்குபடுத்துதல் இந்த நியதிச்சட்ட அமைப்பின் முக்கிய நோக்கமாக இருந்தது. 1992 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருட்கள் சட்டத்தின் கீழ் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் நிறுவப்பட்டது. 1903 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட அரசாங்கத்தின் மிகவும் பழமையான திணைக்களங்களில் ஒன்றான புவிச் சரிதவியல் அளவைப் பணியகத்தின் கடமைகளைச் சாட்டுவதற்கான ஏற்பாடுகளை இச்சட்டத்தின் ஒரு பிரிவு வழங்குகின்றது.

கனிம வளர்ச்சியில் முன்னணி நிறுவனமாக பணியகம் நிறுவப்பட்டிருப்பதன் மூலம் கனிம அடிப்படையிலான கைத்தொழில்களை மேம்படுத்துவதில் அரசாங்கத்தின் உறுதிப்பாட்டுத் தன்மை கோடிட்டுக் காட்டப்படுகின்றது. கனிப் பொருட்களானவை கூடிய விலைகொண்ட இறக்குமதிகளுக்கான பதிலீடுகளை வழங்குதல், கட்டிட மற்றும் நிர்மாணத் துறைக்கான பொருட்களை வழங்குதல், ஏற்றுமதி கைத்தொழிலுக்கான மூலப்பொருட்களை வழங்குதல், தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துதல் மட்டுமன்றி நாட்டுக்கு வருவாயையும் ஈட்டித்தருகின்றன. தேசிய புவி-அறிவியல் தரவுத்தளத்தைப் பேணிச்செல்வதற்கும், குறிப்பிட்ட தகவல்கள் பொதுமக்களுக்கு கிடைப்பதனை உறுதி செய்வதற்கும் பணியகம் பொறுப்பினைக்கொண்டுள்ளது.

மேலும், நாட்டின் கனிம வளங்களுக்கான பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத்தை மேம்படுத்துவது இப் பணியகத்தின் தனிச்சிறப்பாகும். நாட்டின் நலனுக்காக கனிம வளங்களின் இயலாற்றல் உணரப்படுவதை உறுதி செய்தல் மற்றும் கனிமங்கள் திறமையான, பாதுகாப்பான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் பிரித்தெடுக்கப்படுவதை உறுதி செய்வது அதன் ஒரு பிரதான பணியாகும். முறைமையான புவிச்சரிதவியல் வரைபடத்தைத் தயாரிப்பதைப் பொறுப்பேற்றலும் நாட்டின் கனிப்பொருள் மூலவளங்களை மதிப்பிடுதலும் பணியகத்தின் பிரதான பொறுப்புக்களாகும்.

இப் பணியகம் முந்தைய பிரிவுகளில் கலந்துரையாடப்பட்ட விடயங்களுக்கு அமைய ஏற்கனவே அதன் இலக்குகளை அடைந்துள்ளது. எனவே, தலைவர் பரிந்துரைத்தபடி, பல கலந்துரையாடல்களின் அடிப்படையில் முறையே கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் மற்றும் நடவடிக்கைமுறை ரீதியான மாற்றங்கள் ஆகிய தலைப்புகளின் கீழ் எதிர்வரும் ஆண்டிற்கான உத்தேசிக்கப்பட்ட திட்டத்தை முன்வைப்பதற்கு முன்மொழியப்படுகின்றது.

கட்டமைப்பு ரீதியான மாற்றங்களின் கீழ் பின்வரும் தலைப்புகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்.

- புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தை நிர்வகிக்கின்ற சட்டத்தையும் ஒழுங்கு விதிகளையும் திருத்துதல்.
- புகையிரதத்தைப் பயன்படுத்தி கனிப் பொருட்களை ஏற்றியிறக்குதல்.
- பெறுமதி சேர்க்கப்படுதல் - பதனிடுதல்
- சுண்ணாம்பு கற்களுக்கான அரசுரிமையை அதிகரித்தல்
- தொழில் முயற்சி வள திட்டமிடல் முறைமை
- சனாதிபதி செயலணியின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல்
- அகழ்வாராய்ச்சி உரிமங்கள்
- ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களிடமிருந்து எழுகின்ற பிரச்சினைகள்
- தொழில்துறை கனிமங்களை மேம்படுத்துதல்

நாட்டின் மொத்த தேசிய உற்பத்திக்கு வழங்கப்படும் பங்களிப்பினை 0.1மூ முதல் 4மூ வரை கணிசமான அளவில் அதிகரிப்பதற்கு பணியகம் எதிர்பார்க்கின்றது.



இப் பகுப்பாய்வு பணியகத்தின் தற்போதைய நிலைமையை மதிப்பிடுவதை நோக்கமாகக் கெ-ாண்டுள்ளதுடன் அதை வலுப்படுத்துவதன் மூலம் அதன் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்குத் தேவையான கட்டமைப்பு ரீதியான சீராக்கல்களை மேற்கொள்ள முடியும். ஏற்றுக்கொள்ளப்பட்ட ளுறுழுவு பகுப்பாய்வு ஒன்றின்போது பலங்கள் மற்றும் பலவீனங்கள் உள்ளக காரணிகளாகக் கருதப்படுகின்ற அதேசமயம் வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்கள் வெளிப்புற காரணிகளாகக் கருதப்படுகின்றன.

ஜீஎஸ்எம்பியின் பலம்

பணியகத்தின் பிரதான பலமாக அமைவது 1992 ஆம் ஆண்டின் சுரங்கங்கள் மற்றும் கன-ிப்பொருட்கள் சட்டத்தின் மூலம் வலுவூட்ட-ப்பட்டுள்ள அதன் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையாகும். கனிம முகாமைத்துவம் மற்றும் கனிமத் தொழில்துறையின் ஒழுங்குபடுத்தல் பொறுப்புகளை நிறைவேற்றுவதில் பணியகம் அதன் ஆற்றலை சிறந்த தரநியமங்களோடு தேவையான நிபுணத்துவத்துடன் பலப்படுத்-தியுள்ளது.

அதிநவீன உபகரணங்களுடன் ஆய்வக உதவி உட்பட உதவி பதவியணியினரால் வசதியளி-க்கப்படுகின்ற அனுபவம் வாய்ந்த தொழில் வல்லுநர்களின் முக்கிய குழு, பணியகத்-தின் தனித்துவமான பலமாக கருதப்படுகி-றது. சேவை வழங்குநராக போட்டியிடுவதில் முன்னணியில் இருப்பதற்கு நூறு ஆண்டுகளு-க்கும் மேலான புகழ் பணியகத்தின் முக்கிய பலங்களில் ஒன்றாகும். கனிமங்கள் மீதான திரட்டப்பட்ட அறிவு, நீண்டகாலமாக வளர்ந்த உத்திகள், கனிம ஆய்வுக்கான நெறிமுறைகள் மற்றும் தொடர்புடைய விடயங்கள் பணியகத்தை இத்துறையில் முன்னோடியாக ஆக்குகின்றன.

தேவையான மேம்பாடுகள்

ஏற்கவே உள்ள கட்டமைப்பு ரீதியான பலவீன-ங்களுக்கு மேலதிகமாக பிரதான தொழில் வல்லு-நர்கள் மற்றும் துணை ஊழியர்களுக்கு இடைய-ில் காணப்படுகின்ற சமநிலையின்மை பிரதான இடையூறாகக் கருதப்படுகின்றது. குறைந்து வரும் தொழில் வல்லுநர்கள் விகிதம் பணியகத்தை செலவுகளைத் தாங்க முடியாத ஒரு நிறுவனமாக உருவாக்குகிறது. முக்கிய குழுக்கள் மற்றும் கனிம ஆய்வு, உரிமங்களை வழங்குதல் போன்ற முக்கிய செயல்பாடுகள் இருந்தபோதிலும், துணை ஊழியர்கள் சேர்க்கப்பட்டு இருந்தபோதிலும் பல தசாப்தங்களாக மாற்றமடையாமல் இருக்கி-ன்றன. பிராந்திய அமைப்பு மூலம் உரிமங்களை வழங்குவதற்கான தற்காலிகப் பரவலாக்கம் பண-ியகத்தின் மற்றொரு பலவீனம் ஆகும் என்பதோடு அது பொதுப் பணி செலவுகளுடன் கடுமையாக சேர்க்கப்பட்டுள்ளது. பணியகத்தின் அனைத்துத் துறைகளிலும் நிலையான செயல்பாட்டு நட-டமுறைகள் இல்லாதது (ளுழுழு) அதன் செயற்பா-டுகள் பற்றிய தீர்மானங்களை தனிப்பயனா-க்க அனுமதிக்கும் ஒரு பெரிய பலவீனமாகும். தொழில்துறை கனிமங்களை உற்பத்தி செய்வ-தற்கு பிரதானமாக பங்களிக்கக்கூடிய வாய்ப்பு-களைப் புறக்கணித்து சரியான பகுப்பாய்வினை மேற்கொள்ளாமல் கட்டுமான மூலப்பொருட்கள் மீது குறிப்பாக மணல் மீது பணியகம் அதன் மன-ிதவலு மற்றும் வளங்களை பெருமளவில் முதலீடு செய்ததுள்ளது. அரசுரிமையைப் பெற்றுக்கொள்வ-தற்காக பாதுகாப்பான பொறிமுறையொன்றை நட-டமுறைப்படுத்துவதன் தோல்வித் தன்மை.்குறை-பாடுகள் பணியகத்தின் நிதி பலத்தை சிதைத்த பின்னடைவாகும்.



பயன்படுத்தப்படாத இயலாற்றல்கள்

தாராளமயப்படுத்தப்பட்ட மற்றும் திறந்த பொருளாதார சூழலில் அரசாங்கத்தின் ஒழுங்குறுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற நிறுவனங்களின் இருப்பு அதன் பொருத்தமான மாற்றங்களின் மீது தங்கியுள்ளது. ஒழுங்குறுத்தல் நியமங்களை எவ்வகையிலும் பாதிக்கச் செய்யாமல் உரிய பிரிவைச் சேர்ந்த அனைத்து செயற்பாட்டாளர்களுக்கும் செயற்படுவதற்கு சமமான வாய்ப்புகளை வழங்கி கடுமையான வகிபங்கிலிருந்து நட்புறவான வசதி வழங்குநராக மாறுவதற்கு.˙. பரிணமிப்பதற்கு தற்போது பணியகத்திற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

முதலீட்டாளர்களைக் கவர்வதற்காக மூலப்பொருட்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி முதலீட்டுத் துறைக்கு வசதிகளை வழங்க வேண்டும் என்ற விடயத்தை பல தசாப்தங்களாக பணியகம் தொடர்ந்தும் கவனிக்காதுள்ளது.

ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்கள்

கட்டுமானக் கைத்தொழில்துறை பகுதியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதன் காரணமாக மேலும் பாதகமான நிலை ஏற்பட்டுள்ளது. முன்னொரு போதும் இல்லாத வகையில் அதிகரித்துள்ள பொதுப்பணி செலவுகள் பணியகத்தின் மீது ஏற்பட்டுள்ள அண்மைக்கால மற்றும் குறுகியகால அச்சுறுத்தல் ஆகும். குழுக்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் தொடர்புபடுகின்ற வெளி அதிகாரசபைகளுக்கு புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் செயற்பாடுகளைப் பன்முகப்படுத்துவது நடுத்தர கால அச்சுறுத்தலாகும். வெளிநாடுகளில் மிகச் சிறந்த தொழில் வாய்ப்புகளைத் தேடி தொழில்வாண்மை பதவியணியினர் பணியகத்தை விட்டுச் செல்வது பணியகத்திற்கு ஏற்பட்டுள்ள நீண்டகால அச்சுறுத்தலாகும் என்பதோடு ஒட்டுமொத்தமாக கைத்தொழில் மீது பாரிய தாக்கம் அதன்மூலம் ஏற்படக்கூடியதாவுள்ளது.

பணிப்பா



டாக்டர்.செனரத் ஹேவகே
பணிப்பாளர் சபையின் தலைவர்



திரு.A.R.விக்கிரமரத்ன
சபை உறுப்பினர்



திரு.W.D.S.ஊ.வெலிவிட்ட
சபை உறுப்பினர்



திரு. I.C. பதிராஜ
சபை உறுப்பினர்



திரு.T.H.M.P சாகர சபை
உறுப்பினர



திரு.பொறி.சஜ்ஜன டீ
சில்வா சபை உறுப்பினர்



திரு .T.H.எக்நத்கெதர
சபை உறுப்பினர்



திரு.K.V.ஜகத் கீர்த்தி குமார
சபையின் செயலாளர்
(2020அக்டோ. - 2021 அக்டோ.)



திருமதி.S.N.B.தல்தென
சபையின் செயலாளர

சிரேஸ்ட முகாமைத்துவம்



டாக்டர்.W.I.S .பர்னாந்து
சிரேஸ்ட பணிப்பாளர் (புவிச்சரிதவியல்) பதிற்கடமை

திரு.M.M.J.P.அஜித் பிரேம
பணிப்பாளர் (வரைபடமாக்கல் மற்றும புவிச்சரிதயவியல் தகவல்கள்)





திருமதி.K.A.P.H.லியனாரச்சி
பணிப்பாளர் (கனிம பெயரிடல்)

திருமதி.Y.P.S.சிறிவர்தன
பணிப்பாளர (ஆய்வுகூடம் மற்றும் பௌதீக பரிசோதனை)





திரு.L.A. பர்னாந்து
பணிப்பாளர் (சுற்றாடல் தாக்க மதிப்பீடு மற்றும் பிராந்தியங்கள்)



திரு.K.V.ஜகத் கீர்த்தி குமார
பணிப்பாளர் (சுரங்கப் பாதுகாப்பு)

திரு.U.J.P.செனாரத்ன
பணிப்பாளர் (மனித வளங்கள்)





திருமதி.சுமேதா இராகுபத்த
பணிப்பாளர் (நிதி)

திருமதி.M.S.K .பர்னாந்து
பணிப்பாளர் (சட்டம்)கடமையிலுள்ளார்



ஜீஎஸ்எம்பீயின் எதிர்கால மூலோபாயங்கள்

நடவடிக்கை முறை ரீதியான மாற்றங்களின் கீழ் பின்வரும் தலைப்புகள் கலந்துரையாடலுக்கு உட்படுத்தப்படுகின்றன.

01 புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தை நிர்வகிக்கின்ற சட்டத்தைத் திருத்துதல்.
தொழிற்பாட்டு ∴ நடைமுறை சார்ந்த சிரமங்களைத் தவிர்த்து தற்போதைய சந்தை தேவைப்பாடுகளுக்கு அமைவாக மாற்றமடைவதற்கு இது வசதியாக அமையும். இப்பணியினை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிபுணத்துவ வழிகாட்டல்.∴ஆதரவினைப் பெற்றுக்கொண்டு இனங்காணப்பட்ட திருத்தங்கள் பற்றிய நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02 பணியகத்தின் நடவடிக்கைகளை இலகுவாக மேற்கொள்வதன் பொருட்டு நடவடிக்கைமுறைக் கோவையொன்றை நிறைவேற்றிக்கொள்ளல். வெளி மனிதவள ஆலோசகர் ஒருவருக்கு இப்பணியை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

03 ஊழியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை மாற்றப்படுவதோடு அப்பணி மனிதவள பிரிவுக்கு சாட்டப்படும்.

04 இலங்கையில் காணப்படுகின்ற கனிம வகைகள் தொடர்பிலான விழிப்பூட்டலை மேம்படுத்துவதற்காக இலங்கையில் புவிச்சரிதவியல் வரைபடங்கள், கனிமங்கள் மற்றும் நாற்புடை வரைபடங்களைத் தயாரிப்பதற்கு முன்மொழியப்படுகின்றது. தென்மாகாண கனிம வரைபடம் தயாரிக்கப்படுதல் மற்றும் அச்சிடப்படுதல், கதிரவெளி, கல்குடா, வாகனேரி ஆகிய பிரதேசங்களின் கள மற்றும் ஆய்வுகூட பணிகளும் இதன் மூலம் உள்வாங்கப்படும்.

05 தொழில்முயற்சி வளங்களைத் திட்டமிடுதல் - அரசாங்கத்தின் பெறுகை நடவடிக்கை முறைக்கு அமைந்தொழுகும் வகையில் இப்பணி மேற்கொள்ளப்படுவதோடு அதன்மூலம் தொழிற்பாட்டு நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்காகவும் நிறுவனத்தின் ஆக்கவிளைவினை சிறந்த மட்டத்திற்குக் கொண்டு வருவதற்காகவும் உதவி அளிக்கும்.

06 புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் தர நியமங்களை மேம்படுத்துவதற்காக ஐளுழு 9000.∴2015 தர முகாமைத்துவ முறைமையை நடைமுறைப்படுத்துவதற்கு கோரிக்கை விடுக்க தீர்மானிக்கப்பட்டது.

07 குறிப்பாக ஒரு கூரையின் கீழ் கைத்தொழில் கனிப் பொருட்களை வழங்குவதற்காக "ழுநெ ளவழி ளாழி" எனும் எண்ணக்கருவினை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அரச நிறுவனங்கள் தொடர்பில் ஆவணங்களைத் தயாரிப்பதற்கான சுமையை இது குறைக்கும்.

08 சரியான தகவல்கள் தொடர்பில் மக்களை விழிப்புணர்வூட்டுவதற்காக அத்தகைய தகவல்களை அச்சு ஊடகங்களில் வெளியிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

09 பின்வரும் நடவடிக்கைகள் உட்பட சுரங்கப் பிரிவின் 2023 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டம், நிறுவனத்திட்டம் மற்றும் வருடாந்த அறிக்கைகள் என்பவற்றுக்கான பணிகளைப் பூர்த்தி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

(i) துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கு கடற்கரையண்மைப் பரப்பில் மணல் அகழ்வு செய்வதற்காக இரண்டு அகழ்வு உரிமங்கள் வழங்கப்படுதல்.

(ii) மாலைதீவுக்கு 100 கியூபிக் மீட்டர் கடல் மணலை ஏற்றுமதி செய்வதற்கான செயன்முறையை இலகுபடுத்துதல்.

(iii) பாரியளவிலான புனரமைப்புக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

10 பிராந்திய அலுவல்கள் பற்றிய வியடப் பரப்பினை விரிவாக்குவதற்கும் புத்தளம் மாவட்டத்தில் பிராந்திய அலுவலகம் ஒன்றை நிறுவுவதன் மூலம் பிராந்திய அலுவலகங்கள் முன்னேற்றுவதற்கும் முன்மொழியப்பட்டுள்ளது.

11 கரையண்மை பரப்பிற்கான அகழ்வு உரிமங்கள் மீது அடிப்படையாக அமைந்து சுரங்கப் பிரிவின் ஊடாக வருமானங்களை ஈட்டிக்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

12 சுற்றாடல் மீது ஏற்படுத்தப்படுகின்ற தாக்கத்தினை வழமை நிலைக்குக் கொண்டு வருவதற்காக ஒரு பிராந்தியத்திற்காக சுரங்கப் பாதுகாப்புப் பிரிவினால் புணரமைப்புத் நிகழ்ச்சித்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

மேற்படி பணிகளுக்கு மேலதிகமாக பணியகத்தினால் அதன் மொத்த வருமானத்தில் 15மூ ஆன வருமான வரி செலுத்தப்படும் அதேவேளை 2021 ஆம் ஆண்டில் 2 பில்லியன் ரூபா திரட்டு நிதியத்திற்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

மூலோபாய நோக்கங்கள்

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினால் நடைமுறைபடுத்தப்படுகின்ற பல்வகை நிகழ்ச்சித்திட்டங்களின் பரந்த தன்மையினையும் சிக்கல்தன்மையினையும் நோக்கும்போது புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினால் நடைமுறைபடுத்தப்படுவதற்காக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற சகல பணிகளுக்குமான நோக்கங்கள் மற்றும் முன்னெடுப்புக்கள் பற்றிய ஒரு ஆவணமாக இத்திட்டம் தொழிற்படவில்லை மாறாக, புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினால் அடைந்துகொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பெறுபேறுகள் மற்றும் மேற்கொள்ளப்படுதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற முக்கியமான மாற்றங்கள் பிரதிபலிக்கப்படுகின்ற முன்னுரிமையளிக்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் அந்த நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினால் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பிரதான அணுகுமுறைகள் பிரதிபலிக்கப்படுகின்ற அடிப்படை மூலோபாயங்கள் இத்திட்டத்தின் மூலம் முன்வைக்கப்படுகின்றன. புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகமானது 10 நோக்கங்களையும் மூலோபாயங்களையும் கொண்டுள்ளதுடன் அடைந்துகொள்வதற்காக எதிர்பார்க்கப்படுகின்ற அவற்றுக்கான மூலோபாயங்களுடன் ஒவ்வொரு நான்கு மூலோபாய பணிச் சட்டகங்களின் கீழும் அவை கலந்துரையாடப்பட்டுள்ளன.

1. வெளிப்படையானதும், பாதுகாப்பானதும், விஞ்ஞான ரீதியானதும், நிலைபேறானதும், போட்டித்தன்மைமிக்கதுமான ஒழுங்குபடுத்தல் சூழலொன்றுக்காக சட்டக் கட்டமைப்பை மறுசீரமைத்தல்.
2. பௌதீக மற்றும் மனித வள ஆற்றல் விருத்தியினை மேம்படுத்துதல்.
3. ஆய்வுகள், கருத்திட்டங்கள் மற்றும் ஒத்துழைப்புகளை ஊக்குவிப்பதன் மூலம் புவி அறிவியல் ஆராய்ச்சியில் சிறந்து விளங்குதல்.
4. வளங்களில் செழுமையான நாடுகளுடனான கூட்டினை விரைவுபடுத்தி ஆய்வுகளை முடுக்கிவிடுவதன் மூலம் வளங்கள் மற்றும் ஒதுக்கங்களை விரிவுபடுத்துதல்.
5. புவி அறிவியல் ஆவணங்கள் மற்றும் தகவல்களைப் பெறுதல் மற்றும் பாதுகாத்தல் மற்றும் இலங்கையின் புவியியல் வளங்களின் தேசிய விபரக்கொத்தினைத் தொகுத்தல்
6. கனிமத் துறையில் தொழில்நுட்ப-பொருளாதார, விஞ்ஞான மற்றும் நிலையான அபிவிருத்திக்கு வசதி வழங்குதல்.
7. பாதுகாப்பு மற்றும் சுரங்க மீட்பு
8. பொது மக்களுக்கும் புவி அறிவியல் சமுதாயத்திற்கும் சேவை வழங்குதல் மற்றும் சமூகத் தொடர்புகளை ஏற்படுத்துதல்.
9. பணியின் நிலைபேறான அபிவிருத்திக்காக சேவை உருவாக்கும் வழிகளை மேம்படுத்துதல்.
10. பூமியின் இயக்கம் மற்றும் இயற்கை சூழலைக் கண்காணிப்பதன் மூலம் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக ஏற்படுகின்ற பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் பாதிப்புகளை மூலோபாய ரீதியில் குறைத்தல்.

பணியகம் தொடர்பாக

இலங்கையில் கனிப்பொருள்சார் கைத்தொழிலின் முன்னோடி

1992 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க, சுரங்கங்கள் கனிப்பொருட்கள் சட்டத்தின் கீழ் சேவைகளை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகமானது கனிம அபிவிருத்தித் தொடர்பான முன்னணி நிறுவனமாக விளங்குவதுடன், கனிம அடிப்படையிலான கைத்தொழில்களை மேம்படுத்துவதில் அரசாங்கத்தின் ஈடுபாட்டினைக் கோடிட்டுக்காட்டுகின்றது.

இலங்கையில் கனிம அபிவிருத்திக்கான அதிகாரம்பெற்ற நிறுவனமாக விளங்கும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகமானது இதுவரை கனிம ஆய்வுகளை மேற்கொண்டதும் நாட்டுக்கு நன்மைகளைப் பெற்றுத்தந்துள்ளதுமான அமைப்பாகும்.


இலங்கை ஒரு சிறிய நாடு என்பதால், அதன் உப மேற்பரப்புக் கனிம வளமும் அதற்கு நிகராக சிறியளவிலேயே காணப்படுகின்றது. எனவே, இந்த அமைப்பானது கனிம அடிப்படையிலான தொழில்துறைகள் நிறுவப்படுவதனை ஊக்குவிக்கும் அதேவேளை கனிமங்களின் சிக்கனமான பயன்பாட்டை வலியுறுத்துகின்றது. அத்தோடு கனிமங்கள் புதுப்பிக்க முடியாத பொருட்கள் என்பதால் விரயமின்றி அவற்றைப் பயன்படுத்த வேண்டும் எனவும் எச்சரிக்கின்றது.

புவியியல் திறனுக்கான தேசத்தின் முதன்மை வழங்குநராக இருப்பதால், ஜீ.எஸ்.எம்.பீ பூமியில் காணப்படும் வளங்கள் மற்றும் அதனுடன் தொடர்பான பிரச்சினைகள், சிக்கல்கள் பற்றிய புரிதலை மேம்படுத்துகின்றது. விஞ்ஞான ரீதியான நிபுணத்துவத்தின் பன்முகத்தன்மையானது பல விடய ஆய்வுகளை மேற்கொள்ளவும் வள முகாமையாளர்கள், திட்டமிடுபவர்கள் மற்றும் பிற வாடிக்கையாளர்களுக்கு புவியியல் வரைபடத் தொடர் உள்ளிட்ட பக்கச்சார்பற்ற அறிவியல் தகவல்களை வழங்கவும் உதவுகின்றது. ஜீ.எஸ்.எம்.பீ ஆனது பூமியை விவரிக்கவும் புரிந்துகொள்ளவும் இயற்கை பேரழிவுகளிலிருந்து உயிர் மற்றும் சொத்து இழப்புகளைக் குறைக்கவும் புவியியல், சக்தி மற்றும் கனிம வளங்களை முகாமை செய்யவும் எமது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திப் பாதுகாக்கவுமாக தேசத்திற்கு சேவை செய்கின்றது.


பணியகமானது பிரதானமாக நான்கு தொழிற்பாடுகளைக் கொண்டுள்ளன. அவையாவன, புவிச்சரிதவியல் தேசப்படங்களைத் தயாரித்தல், கனிம ஆய்வு, சுரங்க அகழ்வு உரித்துரிமைகள் மற்றும் சுரங்க அகழ்வு ஒழுங்குபடுத்தல் (பிரதான செயற்பாடு) சேவைப் பயனர் பதிற்செயற்பாட்டு நடவடிக்கைகள் (கனிம வள ஆய்வுகள், ஆய்வக சேவைகள், புவி இயற்பியல் மற்றும் துளையிடல் பற்றிய ஒப்பந்தங்கள்) மற்றும் புவி- விஞ்ஞான தகவல்கள் (வெளியிடப்பட்ட மற்றும் வெளியிடப்படாத அறிக்கைகள், வரைபடங்கள் மற்றும் அதன் நூலகத்திலுள்ள பிற காப்பகங்களுக்கான அணுகல்) ஆகும்.

சுரங்கப் பிரிவானது தற்போது கண்டி, மாத்தறை, குருநாகல், பதுளை, இரத்தினபுரி, அநுராதபுரம், அம்பாறை, மொனராகலை, ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, களுத்துறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கம்பஹ, பொலனறுவை கொழும்பு ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள 15 பிராந்திய அலுவலகங்களுடனும் ஹசலக்க, கந்தளாய் ஆகிய 2 உப அலுவலகங்களுடனும் செயற்பட்டு வருகின்றது. தொடர்புடைய மாகாணங்களில் பல்வேறு சுரங்கத் தொழில்களில் ஈடுபட்டுள்ள வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவதும், சட்டவிரோத சுரங்க நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதும் இந்த பிராந்திய அலுவலகங்களின் முக்கிய நடவடிக்கைகளாகும்.

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் அதன் சேவைகளை நாடு பூராகவும் விஸ்தரித்துள்ளது.



வரலாற்றுப் பின்னணி



புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகமானது 1903 ஆம் ஆண்டில் கலாநிதி ஆனந்த குமாரசாமி அவர்களின் தலைமையில் இலங்கைக்கான கனிம ஆய்வு (எம்.எஸ். சி) என்ற பெயரில் ஆரம்பமாகி ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக இயங்கிவந்துள்ள பல புவி-அறிவியல்சார் திணைக்களங்களின் பெருமை வாய்ந்த வாரிசு ஆகும். குறிப்பிட்ட திணைக்களங்கள் வரலாறு முழுவதும் நாட்டின் கனிம வளங்களைப் பற்றிய தரவுகளைக் கண்டுபிடித்தல், ஊக்குவித்தல் மற்றும் பெற்றுக்கொள்ளல் போன்ற தனிச்சிறப்பு வாய்ந்த பதிவைக் கொண்டிருந்ததுடன் தற்போது இயங்கும் கனிப்பொருள் சார்ந்த சகல கைத்தொழில்களும் அவற்றின் இருப்புக்காக மேற்படி திணைக்களங்களுக்கு கடமைப்பட்டுள்ளன.

1939 ஆம் ஆண்டில் எம்.எஸ். சி ஆனது கனிமவியல் திணைக்களம் என அழைக்கப்பட்டதோடு 1962 இல் மீண்டும் புவிச்சரிதவியல் அளவைத் திணைக்களமாக பெயரிடப்பட்டது. 1993 மார்ச் 18 ஆம் திகதி 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள் கனிப்பொருட்கள் சட்டத்தின் மூலம் புவிச்சரிதவியல் ஆய்வுப் பணிகளை நவீன சுரங்கத் திணைக்களத்தின் புதிய பொறுப்புகளுடன் இணைப்பதற்காக பணியகமானது தாபிக்கப்பட்டது.

கனிம வளர்ச்சியில் முன்னணி நிறுவனமாக பணியகம் நிறுவப்பட்டிருப்பதன் மூலம் கனிம அடிப்படையிலான கைத்தொழில்களை மேம்படுத்துவதில் அரசாங்கத்தின் உறுதிப்பாட்டுத் தன்மை கோடிட்டுக் காட்டப்படுகின்றது. கனிப் பொருட்களானவை கூடிய விலைகொண்ட இறக்குமதிகளுக்கான பதிலீடுகளை வழங்குதல், கட்டிட மற்றும் நிர்மாணத் துறைக்கான பொருட்களை வழங்குதல், ஏற்றுமதி கைத்தொழிலுக்கான மூலப்பொருட்களை வழங்குதல், தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துதல் மட்டுமன்றி நாட்டுக்கு வருவாயையும் ஈட்டித்தருகின்றன. தேசிய புவி-அறிவியல் தரவுத்தளத்தைப் பேணிச்செல்வதற்கும், குறிப்பிட்ட தகவல்கள் பொதுமக்களுக்கு கிடைப்பதனை உறுதி செய்வதற்கும் பணியகம் பொறுப்பினைக்கொண்டுள்ளது.

கோவிட் - 19க்கான எங்கள் பதிற் செயற்பாடு



Wash Hand


1. பொதுமக்களுக்கு தொடர்ச்சியான சேவைகளை வழங்குவதற்காக புளுஆடீ ஆனது 2021இன் முதல் அரையாண்டில் கொள்கை நடவடிக்கைகளாக சில சுற்றறிக்கைகளை வெளியிட்டதுடன் வேலைக்கு வருகை தர வேண்டிய ஊழியர்களுக்கு போக்குவரத்து வசதிகளையும் வழங்கி வருகின்றது.



Use Soap

2. கோவிட்-19 தொற்றுநோயின் தாக்கத்தைத் தணிப்பதற்காக, புளுஆடீ ஆனது, குறிப்பிட்ட இயலளவில் தொழிற்படுவதன் பொருட்டு பிராந்திய அலுவலகங்களைத் திறப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளை கோடிட்டுக் காட்டியது.

3. ஏனைய நடவடிக்கைகளுக்கு மத்தியில் கர்ப்பிணிப்பெண் பணியாளர்கள் மற்றும் பால் ஊட்டும் தாய்மார் போன்றவர்கள் தங்கள் வீடுகள் மற்றும் அலுவலகங்களுக்கு வெளியே செல்வதைத் தடை செய்வதும் அடங்கும்.



Avoid Crody

4. அலுவலகத்திற்கு சேவை வழங்கும்போது கோவிட் -19 பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட ஊழியர்களின் மருத்துவப் பரிசோதனைகளுக்கு நிதி உதவி வழங்குதல்.



Use Masker

5. குறிப்பிட்ட பகுதியில் உள்ள பொது சுகாதாரப் பரிசோதகருடன் ஒருங்கிணைத்து தடுப்பூசி ஏற்றுவதற்கு அதிக வாய்ப்புகளை வழங்குதல்.

6. புதிய சுகாதார சுத்திகரிப்பு செயல்முறைக்கான வசதிகள் மற்றும் உபகரணங்களை அறிமுகப்படுத்தி அவற்றை வழங்குதல் மற்றும் மருத்துவ நடைமுறைகள் குறித்து ஊழியர்களுக்கு சில விழிப்புணர்வு அமர்வுகளை நடத்துதல்.



Use Distinction

7. அருகில் உள்ள அலுவலகங்களுக்குச் சமுகமளிக்க ஊழியர்களை அனுமதித்தல்.

8. வேலைமுறைப் பட்டியலை செயல்படுத்துதல்.



Avoid Shakehand

புவிச்சரிதவியல் பிரிவு

புவிச்சரிதவியல் பிரிவின் முன்னேற்றம் மூன்று பிரிவுகளின் கீழ் விவரிக்கப்பட்டுள்ளது. (1) ஜீ.எஸ்.எம்.பீ நிதியத்தின் மூலம் பிரதானமாக நிதியளிக்கப்படுகின்ற செயற்பாட்டுத் திட்ட நடவடிக்கைகள் (2) வாடிக்கையாளர்களின் வேண்டுகோளின் பேரில் மேற்கொள்ளப்படும் சேவைப்பயனர் பதிற்செயற்பாட்டு கருத்திட்டங்கள் மற்றும் (3) குறுகிய கள விஜயங்கள், கூட்டங்கள், பயிற்சிகள் மற்றும் வெளியீடுகளை உள்ளிட்ட ஏனைய செயற்பாடுகள்.

1.1 செயற்பாட்டுத்திட்ட நடவடிக்கைகள் (ஜீஎஸ்எம்பீ நிதி ஏற்பாடுகள்)

2021 ஆம் ஆண்டிற்கான புவிச்சரிதவியல் பிரிவின் செயற்பாட்டுத் திட்ட நடவடிக்கைகள் 04 முக்கிய செயல்திறன் பகுதிகளின் (எம்.பி.ஏ) கீழ் மேற்கொள்ளப்பட்டன.

MPA-1 வரைபடமாக்கல், புவி அறிவியல் தகவல்களை உருவாக்குதல் (புவி-தரவுகள்) மற்றும் தரவு பரப்புதல்.

MPA-2 கனிம ஆய்வுகள், புவி இயற்பியல் ஆய்வுகள் மற்றும் வள மதிப்பீடு


MPA-3 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள், பூமியின் பண்புகள் மற்றும் நில அதிர்வு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்.

MPA-4 உட்கட்டமைப்பு வசதிகள், ஆய்வக வசதிகள் மற்றும் துளையிடும் திறன் மேம்பாடு.


MPA-1 வரைபடமாக்கல், புவி அறிவியல் தகவல்களை உருவாக்குதல் (புவி-தரவுகள்) மற்றும் தரவு பரப்புதல்.

(அ) புவிச்சரிதவியல் வரைபடங்களை அச்சிடுதல்:

முழு இலங்கையையும் உள்ளடக்கிய புவிச்சரிதவியல் வரைபடங்களை வெளியிடுவது பணியகத்தின் பிரதான செயற்பாடுகளில் ஒன்றாகும். நிலப்பரப்பின்புவித்தகவல்களைக் கொண்ட புவிச்சரிதவியல் வரைபடங்களானவை கனிம மற்றும் நிலத்தடி நீர் பற்றிய ஆய்வு, பிரதான நிர்மாண மற்றும் சிவில் பொறியியல் பணிகள் மற்றும் மண்சரிவு அபாய வரைபடங்கள் போன்றவற்றைத் தயாரித்தல் உட்பட பல்வேறு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்படுகின்றன. 2014 ஆம் ஆண்டில் முழு நாட்டையும் உள்ளடக்கிய வகையில் ஜீ.எஸ்.எம்.பீ ஆனது 21 புவிச்சரிதவியல் வரைபடங்களையும் (1:100,000 அளவுத்திட்டம்) அச்சிட்டுப் பூர்த்தி செய்தது. முழு நாட்டையும் உள்ளடக்கிய 1:250,000 அளவிலான நான்கு புவிச்சரிதவியல் வரைபடங்கள் 2016 ஆம் ஆண்டில்



வெளியிடப்பட்டன. அத்துடன் 1:25,000 அளவுத்திட்டத்தில் புவிச்சரிதவியல் வரைபடமாக்கல் 2019 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட யுடீஆீ 1: 50,000 அளவுத்திட்டத்தின் அடிப்படையில் இது மேற்கொள்ளப்படுகின்றது. இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் முதலாவது வரைபடமாக நிலாவெளி வலயம் (இல 23) தெரிவு செய்யப்பட்டது. களப் பணிகள் (வரைபடமாக்கல்) மற்றும் ஆய்வுகூட பகுப்பாய்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு வரைபட தொகுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முழு நாட்டையும் உள்ளடக்கிய 1:500,000 புவிச்சரிதவியல் வரைபடம் தொகுக்கப்பட்டு வருவதுடன் 2022 மார்ச்




இறுதியில் அச்சிடப்படும்.

படம்.1: இடதுபுறம் நிலாவெளியின் புவிச்சரிதவியல் வரைபடம் 1:25,000 (தொகுப்பில் உள்ளது) மற்றும் வலதுபுறம் 1:500,000 அளவிலான முழு நாட்டுக்குமான புவிச்சரிதவியல் வரைபடம் (தொகுப்பில் உள்ளது).

(ஆ) நாற்புடை வரைபடமாக்கல் (கரையோர வலயம்) நிகழ்ச்சித்திட்டம்

புவியியல் சார்ந்த கால அடுக்குகளின் நாற்புடை காலப்பகுதியானது இற்றைக்கு சுமார் 2.58 மில்லியன் ஆண்டுகால வரலாறு வரை நீண்டு செல்கின்றது. இலங்கையின் நாற்புடை அமைப்புகள் ஆனவை கரையோர அடையல்கள் மற்றும் வெள்ளத்தில் மூழ்கும் சமவெளிகளின் வண்டல் அடையல்களுக்கு வரையறுக்கப்படுவதோடு மண் அமைப்புகள் அதில் உள்ளடங்கும். ஆயினும், இந்த அமைப்புகளில் பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த களிமண், மணல் படிவுகள், பவளப் படிவுகள், வளமான மண் போர்வை மற்றும் நிலக்கீழ் நீர்நிலைகள் என்பன அடங்குவதால் இவை மிகுந்த சிறப்பினைப் பெறுகின்றன. புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் 2008ஆம் ஆண்டில் □நாற்புடை புவியியல்சார் வரைபடமாக்கல்□ என்ற பெயரில் கருத்திட்டம் ஒன்றை ஆரம்பித்தது.


நாற்புடை வரைபடமாக்கல் திட்டத்தின் அச்சிடல் பணிகள்



மாத்தறை, அம்பலாங்கொட - பலப்பிட்டிய மற்றும் களுத்துறை நாற்புடை வரைபடங்கள் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தால் இதற்கு முன்னர் வெளியிடப்பட்டதுடன் அம்பாந்தோட்டை - தங்காலை மற்றும் புத்தளம் என்பவற்றுக்கான வரைபடங்கள் 2021 இல் அச்சிடப்பட்டன. இதற்கு மேலதிகமாக, சிலாவத்துறை மற்றும் திஸ்ஸ மஹாராம வரைபடங்கள் தொகுக்கப்பட்டு முடிக்கப்பட்டு அவை ஆசிரியர் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

நாற்புடை வரைபடமாக்கல் தொகுப்பு

கற்பிட்டி, யால, காலி மற்றும் வில்பத்து வலயங்களுக்கான வரைபடமாக்கல் தொகுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் சிலாபம் மற்றும் பத்துளு ஓயா வரைபடமாக்கல் பகுதிகளுக்குள் களப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இந்த வரைபடங்களின் நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட திட்டமிடப்பட்டுள்ளன.



படம் 2: ஆசிரியர் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள திஸ்ஸ மஹாராம வரைபடம் (மேலுள்ளது) மற்றும் சிலாவத்துறை வரைபடம் (கீழே உள்ளது).

(இ) மண் புவிவேதியியல் வரைபடமாக்கல் நிகழ்ச்சித்திட்டம்

மண்ணின் புவிவேதியியல் பண்புகளை ஆய்வு செய்வதற்காக 2008 ஆம் ஆண்டில் மண் புவிவேதியியல் நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. கனிம ஆய்வு, சுற்றாடல் கண்காணிப்பு மற்றும் விவசாய ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காகவும், புவி □ சுகாதார ஆபத்துகளை ஆராய்வதற்காகவும் இந்த வரைபடங்கள் பயனுள்ளதாக அமையும். புவி புவிவேதியியல் வரைபடமாக்கல் களப்பணி 1:50,000 அளவிலான அடிப்படை வரைபடங்களில் மேற்கொள்ளப்பட்டு 1:100,000 அளவில் வெளியிடப்படுகிறது. புவி புவிவேதியியல் வரைபடங்களின் முதல் தொகுப்பு இறக்குவானை - தங்காலி வலய இல. 20 காக பூர்த்தி செய்யப்பட்டதுடன் 2016 இல் புவி புவிவேதியியல் நிலப்பட புத்தகமாக வெளியிடப்பட்டது.


ஆரம்பத்தில் (0 - 0.3அ) மேற்பரப்பு மண்ணில் இருந்தும் அதன் பின்னர் 0.3 - 2அ ஆழத்தில் இருந்தும் ஒவ்வொரு சதுர கி.மீ.பரப்பளவு கொண்ட செவ்வகப் பகுதியிலிருந்து இரண்டு மண் மாதிரிகள் சேகரிக்கப்படுவதோடு அதன் பின்னர் ஒவ்வொரு 04 சதுர கிலோ மீற்றர் பரப்பு கொண்ட பிரதேசம் வரை பயன்படுத்தப்படுகின்றது. இரசாயனப் பண்புகள் அணு உறிஞ்சல் ஸ்பெக்ட்ரோபோட்டோமீட்டர் (யுயுளு) மற்றும் இன்டக்டிவ்லி கப்பிள்ட் பிளாஸ்மா ஆப்டிகல் எமி'ன் ஸ்பெக்ட்ரோமீட்டர் (ஐஊீ-ழுநுளு) ஆகியவற்றைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.




படம் 3 : துளையிடல் முறையின் மூலம் மண் மாதிரி எடுத்தல்

மண் புவிவேதியியல் வரைபடமாக்கல் திட்டத்தின் தொகுப்பு மற்றும் அச்சிடல்

வலய இலக்கம் 06 (வவுனியா - திருகோணமலை) மற்றும் வலய இலக்கம் 08 (அநுராதபுரம் - பொலனறுவை) மண் புவிவேதியியல் வரைபட கோவை தொகுப்புப் பணிகள் இடம் பெற்றுவருவதுடன் ஆசிரியர் குழுவுக்கு விரைவில் கிடைக்கப்படவுள்ளன.






படம் 4: வவுனியா - திருகோணமலை வலயத்தில் காட்மியம் விநியோகம் (மேல் உள்ள படம்) மற்றும் அநுராதபுரம் - பொலனறுவை வலயத்தில் மக்னீசியம் பரவல் (கீழே உள்ள படம்)

விரிவான புவிவேதியியல் வரைபடமாக்கல் திட்டம்

வெளியிடப்பட்ட வரைபடங்களில் குறிப்பிட்ட பகுதிகளுக்கு விரிவான புவிவேதியியல் வரைபடமாக்கல் அறிமுகப்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின் கீழ், ஹம்பாந்தோட்டை கைத்தொழில் வலயத்திற்கான களப்பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் இரசாயன பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.




படம் 5. ஹம்பாந்தோட்டை கைத்தொழில் வலயத்திற்குள்ளும் அதற்கு அருகாமையிலும் மண் மாதிரி (இடது) மற்றும் நீர் மாதிரி (வலது) பெற்றுக்கொள்ளும் அமைவிடங்களைக் காட்டும் வரைபடங்கள்.

(ஈ) வருடாந்த கனிம நூல்கள் - 2019 மற்றும் 2020

2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரிய வருடாந்த கனிம நூல்களின் அச்சிடலுக்குத் தயாரான பதிப்புகள் அச்சிடுவதற்காக அச்சகக் கூட்டுத்தாபனத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(உ) மாகாண கனிம ஆய்வுகள் மற்றும் மாகாண கனிம வரைபடங்கள்

வட மத்திய மாகாணம் மற்றும் சப்ரகமுவ மாகாணம் ஆகிய மாகாணங்களின் மாகாண கனிம வரைபடங்களுக்கான அச்சிடல் பணி பூர்த்தி செய்யப்பட்டதோடு அச்சிடலுக்காக தயார் செய்யப்பட்ட பிரதிகள் அச்சிடுவதற்காக 2019 ஆம் ஆண்டின் இறுதியில் கையளிக்கப்பட்டன. அச்சிடலுக்காக தயார் செய்யப்பட்டிருந்த ஊவா மாகாணப் பிரதியும் 2020 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் சமர்பிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இந்த




படம் 6 : ஊவா மாகாணத்திற்குரிய கனிம வரைபடத்தின் அச்சிடலுக்குத் தயாராகவுள்ள பிரதி

வரைபடங்கள் சீனாவில் அச்சாளர்களிடமிருந்து அச்சிடப்படுவதால் குறிப்பிட்ட அச்சிடப்பட்ட

வரைபடங்கள் இன்னும் கிடைக்கப்படவில்லை. தற்போது நிலவுகின்ற கோவிட் 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக இச்செயற்பாடு தாமதமடைந்துள்ளது.

தென் மாகாண கனிம வரைபடம் முழுமையாக தொகுக்கப்பட்டு மதிப்பாய்வுக்காக ஆசிரியர் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.



படம் 7 : ஆசிரியர் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தென் மாகாணத்திற்குரிய கனிம வரைபடம்

(ஊ) விசேட கனிம வரைபடங்கள்.்.அறிக்கைகள் தயாரிக்கப்படுதல்

"நரம்புப் படிகம் (ஏநனை ஞரயசவண்)" மற்றும் "கனிம மணல்" பற்றிய விசேட கனிம அறிக்கைகளின் இறுதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

MPA-3 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள், பூமியின் பண்புகள் மற்றும் நில அதிர்வு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல்.

(அ) செயலூக்கமற்ற நில அதிர்வு கண்காணிப்புத் திறனை மேம்படுத்துதல்

இலங்கையின் கிழக்குப் பகுதியில் நில அதிர்வு நிலையத்தை நிறுவுதல் (2019 முதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது)

கட்டுமானப் பணிகள் மற்றும் கூருணரிகளை நிறுவுதல் மார்ச் மாத ஆரம்பத்தில் நிறைவடைந்ததோடு பல்க் (டீருடுமு) நில அதிர்வு நிலையம் 2020 மார்ச் 04 ஆம் திகதி தரவு சேகரிப்பதை ஆரம்பித்தது.

இலங்கையின் மேற்குப் பகுதியில் நில அதிர்வு நிலையத்தை நிறுவுதல்: ஆரம்ப வேலைகள்

இலங்கையின் மேற்குப் பகுதியில் நில அதிர்வு நிலையத்தை நிறுவும் பணி சீன நிலநடுக்க நிர்வாக நிறுவனத்திற்கும் (ஊநுயு), புளுஆடீ கும் இடையேயான ஒத்துழைப்பின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது.

சபைப் பத்திரம் முகாமைத்துவ சபைக்குச் சமர்ப்பிக்கப்படதையடுத்து அங்கீகாரம் வழங்கப்பட்டது. இரு தரப்பிலும் உள்ள தொழில்நுட்ப ஊழியர்களிடையே முதற்கட்ட பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் வரையப்பட்டது.

மேற்கு, தென்கிழக்கு மற்றும் தென்மேற்கில் முன்மொழியப்பட்ட இடங்களுக்கான சில பொருத்தமான தளங்கள் புவியியல் பரவல், பிராந்திய புவியியல், பாறைகளின் கிடைக்கும் தன்மை மற்றும் அணுகல் ஆகியவற்றின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளன. நிர்வாகப் பணிகள் முடிந்தவுடன் மேலும் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

04 நில அதிர்வு நிலையங்களினதும் நில அதிர்வு கண்காணிப்பு நிலையத்தினதும் பராமரிப்பு


நான்கு நில அதிர்வு நிலையங்களிடமிருந்தும் தரவுகள் கிடைக்கக்கூடியதாக இருந்தமையானது 2021 இல் திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டதோடு நில நடுக்கம், நில அதிர்வு மற்றும் இந்தியப் பெருங்கடலில் ஏற்படும் பூகம்ப நிகழ்வுகள் குறித்த பொதுமக்களின் புகார்களுக்கு தரவு நிலையம் வெற்றிகரமாக பதிலளித்துள்ளது.

நில அதிர்வு வலய வரைபடத்தைத் தயாரித்தல்

நில நடுக்க அபாயம் என்பது ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஏற்படக்கூடிய நிலநடுக்கத்துடன் தொடர்புடைய ஆபத்து ஆகும் என்பதோடு பல்வேறு பகுதிகளில் ஏற்படக்கூடிய ஒப்பீட்டு ஆபத்துக்களை நில அதிர்வு ஆபத்து வரைபடம் காட்டுகிறது. நில அதிர்வு அபாயங்களைப் புரிந்துகொள்வதற்கும் பேரழிவுகளைத் தணிப்பதற்கும் இது முக்கியமான தகவல்களை வழங்குவதோடு நிலப் பயன்பாட்டுத் திட்டமிடல், ஆபத்துகளைக் குறைத்தல் மற்றும் அவசர சந்தர்ப்பங்களில் பதிற் செயற்பாடு காட்டுவதற்காகவும் அவற்றைப் பயன்படுத்தலாம்.

பூகம்ப விபர நிரல் ஆனது புவிச்சரிதவியல், அளவை மற்றும் சுரங்கப் பணியகம், ஐக்கிய அமெரிக்கக் குடியரசின் புவியியல் ஆய்வு நிறுவனம் மற்றும் சர்வதேச நில நடுக்க நிலையம் ஆகிய நிறுவனங்களின் தரவுத்தளங்கள், வரலாற்றுப் பதிவுகள் மற்றும் ஆய்வுக் கட்டுரைகளிலிருந்து கிடைக்கக்கூடிய தரவுகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இது இலங்கையின் மத்திய பிரதேசத்திலிருந்து 500 கி.மீ ஆரையுடன்கூடிய பரப்பளவில் ஏற்படும்நில அதிர்வுநிகழ்வுகளை உள்ளடக்குகின்றது. இலங்கை மற்றும் அதைச் சுற்றியுள்ள புவியியல் கட்டமைப்புகள் பற்றிய தரவுகள் இலக்கிய மீளாய்வின் அடிப்படையில் மீள் மதிப்பீடு செய்யப்படுகிறது.

இலங்கையின் மத்தியப் பிரதேசத்தில் தற்காலிக **நில அதிர்வு கண்காணிப்பு வலையமைப் பொன்றை உருவாக்குதல்**



படம் 01: தற்காலிக நில அதிர்வு நிலைய வலையமைப்பின் அமைவிட வரைபடம்

அணைப்பகுதிகளில் இயற்கை மற்றும் மனித செயற்பாடுகள் காரணமாக ஏற்படுகின்ற நுண்ணிய நில அதிர்வு நடவடிக்கைகளை கண்காணிக்க அடர்த்தியான குறுகிய கால நில அதிர்வு வலையமைப்பை நிறுவுவது இக் கருத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இது புகுணுஇ ஜெர்மனி மற்றும் ஜீ.எஸ்.எம்.பி. க்கு இடையிலான ஒத்துழைப்பின் கீழ் தொடங்கப்பட்டது. புகுணு வழங்கிய பல கூருணரிகள் திகன பகுதியைச் சுற்றி நிறுவப்பட்டது. 2021 ஜூன் முதல் டிசம்பர் வரையிலான 6 மாத காலத்திற்கு தரவு சேகரிக்கப்பட்டது.

விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

1. திகன பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி

இந்த நிகழ்ச்சி அனர்த்த முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்து தொடங்கப்பட்டது. நிகழ்ச்சி 2021 மார்ச் 8 முதல் மார்ச் 10 வரை நடைபெற்றது. குண்டசாலை மற்றும் பாத்தஹேவாஹெட்ட இந்த நிகழ்ச்சிகளுக்கான இலக்கு னுளு பிரிவுகள் ஆகும். இந்த மூன்று நாட்களில் 06 நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. 2020 இல் திகன பிரதேசத்தில் ஏற்பட்ட நிலநடுக்கங்கள் தொடர்பில் இந்த நிகழ்ச்சித்திட்டம் முக்கியமாக கவனம் செலுத்தியது.

2. ஊடகவியலாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி

2021 செப்டெம்பர் 23ஆம் திகதி சுற்றாடல் அமைச்சின் மேற்பார்வையின் கீழ் இந்த நிகழ்ச்சித்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சியானது இலங்கையில் ஏற்பட்ட பூகம்பங்கள் மற்றும் அண்மைக்கால நிலநடுக்கங்கள் பற்றிய பொதுவான அறிமுகத்தை பிரதானமாக மையப்படுத்தியது. இந்நிகழ்வில் கொழும்பு மாவட்ட ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டனர்.

(ஆ) ஜீஎஸ்எம்பி - நூலகத்தை தரமுயர்த்துதல்

1. நூலக தரவு முகாமைத்துவ தொடர்ச்சிக்கான கோஹா மென்பொருள்.

வெளியிடப்படாத தொழில்நுட்ப அறிக்கைகளுக்கான தரவு உள்ளீடு பூர்த்தி செய்யப்பட்டது.

ஜர்னல் கட்டுரைகளுக்கான தரவு

உள்ளீடு ஆரம்பிக்கப்பட்டதோடு இது அடுத்த சில ஆண்டுகளில் செயல்படும்.

2. நூலக ஆவணங்களின் பாதுகாப்பு மற்றும் பேணுகை - 80மூ

பாதுகாக்க வேண்டிய நூலக ஆவணங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு இப் பணியை மேற்கொள்வதற்காக, ஜே.ஆர்.ஜெயவர்த்தன நிலையத்திற்கு ஒப்படைக்கப்பட்டது.

3. சஞ்சிகைகளைக் கட்டுதல் - 80மூ

கட்ட வேண்டிய அறிவியல் இதழ்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன் பெறுகைச் செயன்முறை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

(இ) அருங்காட்சியகத்தை நவீனமயப்படுத்துதல்

புதிய ஆய்வகக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டதன் பின்னர் அதில் அருங்காட்சியகம் நிறுவப்படவுள்ளதால் அது பூர்த்தி செய்யப்படும் வரை இந்த நிகழ்ச்சித்திட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

MPA-4 உட்கட்டமைப்பு வசதிகள், ஆய்வக வசதிகள் மற்றும் துளையிடும் திறன் என்பவற்றுக்கான மேம்பாடு

(அ) பாறையியல் ஆய்வகம்

பாறையியல் ஆய்வகம் மூலமான வருமானம்

	விபரம்	வருமானம்/பெறுமதி (ரூபா)
1	வெளி வாடிக்கையாளர்களுக்காக மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வுகள் (365 மாதிரிகள்) மணல் மாதிரிகளின் கனிமவியல் பகுப்பாய்வு -17 மாதிரிகள் மெல்லிய வெட்டுத் துண்டு தயாரிப்பு & பாறைவகுப்பியல் பகுப்பாய்வு -21 மாதிரிகள் ஏனைய (கனிம அடையாளம், துகள் அளவு பகுப்பாய்வு) -279 மாதிரிகள்	1,453,890.00
2	ஜீ.எஸ்.எம்.பி அதிகாரிகளின் வேண்டுகோளின் பேரில் கருத்திட்டங்கள் மற்றும் களப்பணிகள் என்பவற்றுக்காக மேற்கொள்ளப்பட்ட ஏனைய பகுப்பாய்வுகள் (247 மாதிரிகள்)	1,115,500.00
3	ஒழுங்குறுத்தல் பணிக்காக மேற்கொள்ளப்பட்ட ஏனைய பகுப்பாய்வுகள் (73 மாதிரிகள்)	341,500.00

செயற்பாட்டுத்திட்ட நடவடிக்கைகளுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட பணிகள்

கருத்திட்டத்தின் பெயர்	பகுப்பாய்வு கோரப்பட்டது	பகுப்பாய்வு வகை	மாதிரிகளின் தன்மை	மாதிரிகள்	பகுப்பாய்வின் பெறுமதி / ரூ.
ஆற்று வண்டல் ஆய்வுகள்	திரு. ஜயகொடி, சிரேஸ்ட புவியியலர்	முழுமையான கனிமவியல் பகுப்பாய்வு	மணல்	24	120,000.00
டீஎன்ஆர்எம்எஸ்/ ஆர்ரீ/2020	திரு.கே.ஏ.ஜீ.சமீர், புவியியலர்	முழுமையான கனிமவியல் பகுப்பாய்வு	மணல் / பாறை	46	292,000.00
புவிச்சரிதவியல் வரைபடமாக்கல்	திரு.எச்.எஸ். லசந்த, புவியியலர்	மெல்லிய வெட்டுத் துண்டு தயாரிப்பு	பாறை	27	162,000.00
மொத்தம்				**97**	**574,000.00**

(ஆ) பகுப்பாய்வு ஆய்வு கூடம்

பகுப்பாய்வு ஆய்வு கூடம் மூலமான வருமானம்

	விபரம்	வருமானம்/ பெறுமதி (ரூபா)
4. செலவுகளைக் குறைப்பதற்காக பிரிண்டர்கள், புகைப்பட நகல் இயந்திரங்கள் போன்றவற்றை வாடகைக்கு எடுப்பதற்கு சபையின் அங்கீகாரத்தைப் பெறுதல்.
5. நாட்டில் அவசர சூழ்நிலையில் வீட்டிலிருந்து வேலை செய்வதற்காக மடிக் கணினிகளை கொள்வனவு செய்வதற்காக ஊழியர்களுக்கு கடன் வழங்க சபையின் அங்கீகாரத்தைப் பெறுதல்.
6. நீண்ட கால தாமதம் ஏற்பட்டுள்ள 10க்கும் மேற்பட்ட சிரேஸ்ட பதவிகளுக்கு ஊழியர் ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள நேர்முகப் பரீட்சைகளை நடத்துதல்.
7. புதிய இடமாற்றக் கொள்கையைத் தயாரித்து, அதை சபையின் அங்கீகாரத்துக்காக அனுப்புதல்.
8. குறைதீர்ப்புக் குழுவின் பரிந்துரைகளை குறுகியகால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால ரீதியில் செயல்படுத்த அறிக்கையொன்றைத் தயாரித்து அங்கீகாரத்திற்காக அதை சபைக்கு அனுப்புதல்.
9. பணிநிலைப் பிரிவு, ஆட்சேர்ப்புத் திட்டம் மற்றும் நிறுவன கட்டமைப்பின் குறைபாடுகளை அடையாளம் கண்டு அவற்றை சரிசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்துதல்.
10. ஊழியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பிரத்தியேகமாக நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளை சபைக்கு ஆற்றுப்படுத்துதல்.
11. மனித வளப் பிரிவின் அன்றாடக் கடமைகள் அனைத்தையும் திறம்படச் செய்தல்.

2022 ஆம் ஆண்டுக்கான எதிர்காலத்திட்டங்கள் - மனித வளங்கள் மற்றும் நிர்வாகப் பிரிவு

1. தானியங்கி விடுமுறை மற்றும் வருகை முறைமையொன்றை நடைமுறைப்படுத்துவதற்காக சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளல்.
2. புதிய பதவியணி ஒன்றை அமைத்து முகாமைத்துவ சபையின் அனுமதியுடன் அங்கீகாரம் பெறுவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்புதல்.
3. வருடத்தின் முதல் ஆறு மாதத்தில் அனைத்து ஆட்சேர்ப்புகளையும் பூர்த்தி செய்தல்.
4. சபையின் அங்கீகாரத்தின் பேரில் குறைதீர்ப்புக் குழுவின் குறுகிய கால, நடுத்தரகால மற்றும் நீண்டகால விதப்புரைகளை நடைமுறைப்படுத்த ஆரம்பித்தல்.
5. ஊழியர்களுக்காக அவர்களின் தொழிலின் வகிபங்குக்கு அமைய மாதமொன்றில் இரண்டு தடவைகள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்.
6. தலைமைத்துவ பண்புகள் மற்றும் ஆங்கில மொழி என்பவற்றை மேம்படுத்துவதற்காக வருடமொன்றில் ஆறு பயிற்சி நிகழ்த்திட்டங்களை ஒழுங்கு செய்தல்.
7. தேசிய உற்பத்தித்திறன் நிறுவனத்தின் உதவியோடு 5ளு எண்ணக்கருவினை அறிமுகப்படுத்துதல் மற்றும் மூன்று பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல்.
8. ஆகக் குறைந்தது இரண்டு வெளிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல்.
9. நலன்புரிச் சங்கத்தின் உதவியுடன் ஊழியர்களுக்கு மத்தியில் ஒற்றுமையை வளர்ப்பதற்காக கிரிக்கெட் போட்டியொன்றை, புத்தாண்டு விழாவொன்றை, வெசாக் விழாவொன்றை ஒழுங்கு செய்தல்.
10. மில்க் பார் ஒன்றைத் திறந்து வைத்தல் மற்றும் ஊழியர்களின் பயன்பாட்டு கட்டணப் பட்டியல்களைச் செலுத்துவதற்காக இயந்திரமொன்றைப் பொருத்துதல்.

சட்டப் பிரிவு

சட்டப் பிரிவின் செயற்பாடுகள்

- சட்டப் பிரிவினால் கையாளப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை - 75

உயர் நீதிமன்றம்	–	10 வழக்குகள்
மேன்முறையீட்டு நீதிமன்றம்	-	20 வழக்குகள்
சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றம்	-	01 வழக்கு
மேல் நீதிமன்றம்	-	04 வழக்குகள்
மாவட்ட நீதிமன்றம்	-	03 வழக்குகள்
நீதவான் நீதிமன்றம்	-	31 வழக்குகள்
தொழில் நியாய சபை	-	01 வழக்கு
மனித உரிமைகள் ஆணைக்குழு	–	03 வழக்குகள்
தொழில் திணைக்களம்	–	2 வழக்குகள்

- நீதிமன்றங்களில் முன்னிலையாதல்- **213**

ஜனவரி- 24 வழக்குகள்	ஜூலை- 23 வழக்குகள்
பெப்ருவரி- 19 வழக்குகள்	ஆகஸ்ட்- 12 வழக்குகள்
மார்ச்-- 26 வழக்குகள்	செப்டம்பர்- 11 வழக்குகள்
ஏப்ரல்- 10 வழக்குகள்	அக்டோபர்- 33 வழக்குகள்
மே- 08 வழக்குகள்	நவம்பர்- 10 வழக்குகள்
ஜூன்- 11 வழக்குகள்	டிசம்பர்- 26 வழக்குகள்

- அமுலாக்கப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட முற்றுகைகளைத் தொடர்ந்து தாக்கல்

செய்யப்பட்ட புதிய வழக்குகள்	- **26**
ஜனவரி முதல் ஏப்ரல் வரை 20 அக்டோபர்	- 04
நவம்பர்	- 02

- சட்டப் பிரிவினால் கையாளப்படும் வழக்குகள் தொடர்பாக சட்டக் கருத்தைப் பெறுவது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் நடத்தப்பட்ட ஆலோசனைகள் - 15
- கம்பெனிப் பதிவாளர் அலுவலகத்தில் சுரங்க அகழ்வு நடவடிக்கைகள் பற்றிய கோப்புகளைப் பரிசோதித்தல் - 16
- அமுலாக்கப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட முற்றுகைகள் மற்றும் புலனாய்வுகள் - 147
  - புலனாய்வுகள் - 33
  - முற்றுகைகள் - 114
- அமுலாக்கப் பிரிவினால் கையாளப்பட்ட மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை- **295**
- முற்றுகைகள் மற்றும் புலனாய்வுகள் மூலம் அரசுக்கு அபராதமாக வசூலிக்கப்பட்ட மொத்தத் தொகை - ரூ.1,874,766.25
- கோரிக்கைப் பத்திரங்கள் மற்றும் நீதிமன்றத்தில் வழக்குகளைத் தாக்கல் செய்வதன் மூலம் அரசுரிமையாக சேகரிக்கப்பட்ட மொத்தத் தொகை - ரூ.1,129,540.80
- சட்ட ஆலோசனைகளைப் பெறுவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் சட்டப் பிரிவிற்குக் கிடைத்த கடிதங்கள் - 1334

- பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள், அரச அதிகாரிகள், துணை அதிகாரிகள், உரிமம் வைத்திருப்பவர்கள்/விண்ணப்பதாரர்கள் மற்றும் பிறருக்கு அனுப்புவதற்காக தயாரிக்கப்பட்ட கடிதங்கள், அறிக்கைகள், குறிப்புகள் - 484
- சட்ட அமுலாக்கப் பிரிவினால் கையாளப்பட்ட மேன்முறையீட்டு சுரங்கக் கோப்புகள் - 20
- சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காக சட்டப் பிரிவால் கையாளப்பட்ட சுரங்கக் கோப்புகள்- 251
- சட்ட அமுலாக்கப் பிரிவினால் கையாளப்பட்ட கடிதங்களும் கோப்புகளும் - 312
- பொலீஸ் உத்தியோகத்தர்களுக்கும் விசேட அதிரடிப்படை உத்தியோகத்தர்களுக்கும் சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருட்கள் சட்டம் தொடர்பாக சட்டப் பிரிவின் மூலம் நடத்தப்பட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் - 10

  நிகழ்ச்சிகள்

    - பெப்ருவரி – பொலிஸ் நிலையம், பொலனறுவை
    - யூன் - கட்டானை பொலிஸ் அக்கடமி
    - ஆகஸ்ட் - கட்டானை பொலிஸ் அக்கடமி (நான்கு நிகழ்ச்சிகள்)
    - அக்டோபர் - கட்டானை பொலிஸ் அக்கடமி, மருதானை பொலிஸ் அக்கடமி மற்றும் குருநாகல் வெஹெர பொலிஸ் நிலையம்
    - டிசெம்பர் - யாழ்ப்பாணம்

- சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் குறித்து சட்டப் பிரிவால் நடத்தப்பட்ட GSMB அலுவலர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள். – 01 நிகழ்ச்சி
- GSMB சார்பாக தயாரிக்கப்பட்ட ஒப்பந்தங்கள் - 34
    - குத்தகை ஒப்பந்தங்கள் - 11
    - துளையிடல் பற்றிய ஒப்பந்தங்கள் - 02
    - சேவை ஒப்பந்தங்கள் - 10
    - MIA ஒப்பந்தங்கள் - 06
    - புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoU) - 05

- சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்திற்கான திருத்தங்கள்
    - ஏனைய பிரிவுகளின் கருத்துகளைப் பெற உள்ளக கூட்டங்கள் நடத்தப்பட்டன.
    - திருத்தப்பட வேண்டிய முக்கியமான பகுதிகள் அடையாளம் காணப்பட்டன.
    - புனரமைப்பு, நிபந்தனை மீறல் பற்றிய தவறுகள் மற்றும் சட்டவிரோதமாக அகழ்வு செய்யப்பட்ட கனிமங்கள் மற்றும் அதற்காகப் பயனப்படுத்தப்பட்ட உபகரணங்கள் பறிமுதல் செய்யப்படுதல் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் அடையாளம் காணப்பட்டன.
    - அடிப்படை ஆவணமாக சட்டப் பிரிவால் தயாரிக்கப்பட்ட வரைவு சுற்றாடல் அமைச்சின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டது.
- ஒழுங்குவிதிகளுக்கான திருத்தங்கள்

- ஒழுங்குவிதிகளின் முதல் பகுதி 04.07.2019 ஆம் திகதி வெளியிடப்பட்டதுடன் 2வது பகுதி சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

- மா ஓயா முகாமைத்துவ கூட்டத்தை நடைமுறைப்படுத்தல்
    - விசேட கூட்டம் 2021.08.10 ஆம் திகதி நடத்தப்பட்டது.

- ஏனைய உள்ளக/வெளிப்புற கூட்டங்கள் - **50**

எ சுருக்கம்

எ பதவியணி -

- சட்டப் பிரிவின் மொத்த நிரந்தரப் பணியாளர்கள் – 09 (02 சட்டத்தரணிகள், 03 சட்ட அமுலாக்க அதிகாரிகள், 03 முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் 01 அலுவலக உதவியாளர் உட்பட.)
- சட்டப் பிரிவில் உள்ள மொத்த ஒப்பந்தப் பணியாளர்கள் – 03 (03 சட்டத்தரணிகள்)

எ செயற்பாடுகள் –

- சட்டப் பிரிவினால் கையாளப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கை - **75**
- நீதிமன்றங்களில் முன்னிலையாதல் - **213**
- அமுலாக்கப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட முற்றுகைகளைத் தொடர்ந்து தாக்கல் செய்யப்பட்ட புதிய வழக்குகள் - **26**
- சட்டப் பிரிவினால் கையாளப்படும் வழக்குகள் தொடர்பாக சட்டக் கருத்தைப் பெறுவது தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் நடத்தப்பட்ட ஆலோசனைகள் - **15**
- கம்பெனிப் பதிவாளர் அலுவலகத்தில் சுரங்க அகழ்வு நடவடிக்கைகள் பற்றிய கோப்புகளைப் பரிசோதித்தல் - **16**
- அமுலாக்கப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட முற்றுகைகள் மற்றும் புலனாய்வுகள் - **147**
- அமுலாக்கப் பிரிவினால் கையாளப்பட்ட மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை - **295**
- முற்றுகைகள் மற்றும் புலனாய்வுகள் மூலம் அரசுக்கு அபராதமாக வசூலிக்கப்பட்ட மொத்தத் தொகை - ரூ. **1,874,766.25**
- கோரிக்கைப் பத்திரங்கள் மற்றும் நீதிமன்றத்தில் வழக்குகளைத் தாக்கல் செய்வதன் மூலம் அரசுரிமையாக சேகரிக்கப்பட்ட மொத்தத் தொகை - ரூ. **1,129,540.80**
- சட்ட ஆலோசனைகளைப் பெறுவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் சட்டப் பிரிவிற்குக் கிடைத்த கடிதங்கள் - **1334**
- பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றங்கள், அரச அதிகாரிகள், துணை அதிகாரிகள், உரிமம் வைத்திருப்பவர்கள்/விண்ணப்பதாரர்கள் மற்றும் பிறருக்கு அனுப்புவதற்காக தயாரிக்கப்பட்ட கடிதங்கள், அறிக்கைகள், குறிப்புகள் - **484**
- சட்ட அமுலாக்கப் பிரிவினால் கையாளப்பட்ட மேன்முறையீட்டு சுரங்கக் கோப்புகள் - **20**
- சட்ட ஆலோசனைகளை வழங்குவதற்காக சட்டப் பிரிவால் கையாளப்பட்ட சுரங்கக் கோப்புகள்- **251**
- சட்ட அமுலாக்கப் பிரிவினால் கையாளப்பட்ட கடிதங்களும் கோப்புகளும் – **312**
- விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் -**11**
- GSMB சார்பாக தயாரிக்கப்பட்ட ஒப்பந்தங்கள் - **34**
- உள்ளக/வெளிப்புற கூட்டங்கள் - **51**

கையொப்பமிட்டவர்: காஞ்சனா பெர்னாந்து – சட்டப் பணிப்பாளர் (AD)


நிதிசார் மீளாய்வு

நாட்டில் தொற்றுநோய் நிலவியபோதிலும் 2021 ஆம் ஆண்டின் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் வருமானம் மற்றும் செலவினமானது 2020 ஆம் ஆண்டின் வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பிடுகையில், உயர் மட்டத்தைக் குறிக்கிறது. 2021 ஆம் ஆண்டில் பணியகத்தால் ஈட்டப்பட்ட வருமானம் அரசுரிமை உட்பட 3230 மில்லியன் ரூபாவாகும். இது 2020 ஆம் ஆண்டின் வருமானத்தை விட 30.4மூ அதிகரிப்பாகும். அதேபோன்று, பொதுத் திறைசேரிக்கு வழங்கப்பட்ட மானியத்தைத் தவிர்த்து 2021 ஆம் ஆண்டின் வருடாந்த செலவு 1,197 மில்லியன் ரூபாவாகும். 2020 ஆம் ஆண்டு செலவினத்துடன் ஒப்பிடுகையில் இது 23மூ சரிவாகும். இதன் விளைவாக, வருடத்தின் நிகர வருமானம் 2,033 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன், இது 62மூ வளர்ச்சியாகும்.

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் 2021 ஆம் ஆண்டில் திரட்டு நிதியத்துக்கு 2000 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

பணியகத்தின் 2017 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான வருமானத்தை பின்வருமாறு பகுப்பாய்வு செய்யலாம் என்பதுடன் வருமான வகையின் மாறுபாட்டை அதன் மூலம் கவனிக்க முடியும்.

	2017	2018	2019	2020	2021
Royalty Income	Rs.Mn 4626	Rs.Mn 4336	Rs.Mn 1998	Rs.Mn 1602	Rs.Mn 2451
License Income	Rs.Mn 276	Rs.Mn 182	Rs.Mn 194	Rs.Mn 143	Rs.Mn 232
Inspection Fees	Rs.Mn 260	Rs.Mn 244	Rs. Mn 262	Rs.Mn 252	Rs.Mn 286
Laboratory Income	Rs.Mn 2.6	Rs.Mn. 4.1	Rs.Mn 5.3	Rs.Mn 3.6	Rs.Mn 4
Project Income	Rs. Mn 24	Rs.Mn 49	Rs.Mn 18	Rs.Mn 24	Rs.Mn 27
Interest Income	Rs.Mn 281	Rs.Mn 323	Rs.Mn 228	Rs.Mn 173	Rs.Mn 165
Other Income	Rs.Mn 100	Rs.Mn 106	Rs.Mn 92	Rs.Mn 78	Rs.Mn 129



நிதி அறிக்கைகள்

1. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

1.1 பொதுக் கொள்கைகள்

1.1.1 அறிக்கையிடும் நிறுவனம்

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் (ஜீஎஸ்எம்பீ) ஆனது 1992 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க சுரங்கங்கள், கனிப்பொருட்கள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட ஒரு நியதிச்சட்ட நிறுவனமாகும். அதன் பிரதான வர்த்தக நிலையமானது இலக்கம் 569, எப்பிட்டமுல்ல வீதி, பிற்றகோட்டே எனும் இடத்தில் அமைந்துள்ளது. கண்டி, மாத்தறை, குருநாகல், குருநாகல் ஹரித்த, பதுளை, இரத்தினபுரி, அனுராதபுரம், அம்பாறை, மொனராகலை, அம்பாந்தோட்டை, திருகோணமலை, களுத்துறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கம்பஹா, பொலனறுவை, மன்னார், வவுனியா, மாத்தளை, முல்லைத்தீவு மற்றும் கொழும்பு ஆகிய இடங்களில் அமைந்துள்ள 21 பிராந்திய அலுவலகங்களுடன் ஜீஎஸ்எம்பீ தற்போது இயங்கி வருகின்றது.

1.1.2 துணை மற்றும் உப துணை நிறுவனங்கள்

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்திற்கான தொழில்நுட்பச் சேவைகள் தனியார் லிமிடெட் நிறுவனத்தின் பங்கு மூலதனத்தில் 66%இல் (400,000 பங்குகள்) பணியகம் முதலீடு செய்துள்ளது. மேலும், குறிப்பிட்ட பதிவு செய்யப்பட்ட அலுவலகம் இலக்கம் 190/ஏ, ஸ்டான்லி திலக்கரத்ன மாவத்தை, நுகேகொடையில் அமைந்துள்ளது.

சந்தையில் மணல் விலையை கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல் என்பவற்றுக்காக வர்த்தக நடவடிக்கைகளையும் கருத்திட்ட வர்த்தக நடவடிக்கைகளையும் மேற்கொள்வது ஜீ.எஸ்.எம்.பி தொழில்நுட்பச் சேவைகள் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் முதன்மை நடவடிக்கைகள் ஆகும். அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானமாக கட்டுமானத் துறைக்கு ஆதரவளிப்பதற்காக மானிய விலையில் மணல் விற்பனை செய்யப்படுவதோடு முக்கியமாக, வர்த்தக நடவடிக்கைகளுக்கான இடங்களை கம்பெனி அமைத்துமுள்ளது. தனியார் கம்பெனி தனது வாடிக்கையாளர்களுக்கான கருத்திட்டங்களாக தொழில்நுட்ப ஆதரவு சேவைகளை ஏற்றுள்ளதுடன் ஜீ.எஸ்.எம்.பி யின் ஆணைக்கு உட்படாத ஆள்வளம் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவம் தொடர்பான பணிகளையும் அதன் வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது.

ஜீ.எஸ்.எம்.பி.யின் தலைவர் ஜீ.எஸ். எம்.பி தொழில்நுட்பச் சேவைகள் (பிரைவேட்) லிமிடெட் நிறுவனத்தின் தலைவராகவும் உள்ளதுடன் ஜீ.எஸ். எம்.பி.யின் வேறு பணிப்பாளர்(கள்) அல்லது ஊழியர்கள் துணை நிறுவனத்தின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்படுவதில்லை.

1.1.3 ஒருங்கிணைந்த கணக்குகளைத் தயாரித்தல்

துணை நிறுவனத்தின் கணக்கீட்டு ஆண்டு ஆனது தாய் நிறுவனத்திற்கு ஏற்ப மாற்றப்பட்டு ஒருங்கிணைந்த கணக்குகளைத் தயாரித்து சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கான அங்கீகாரத் திகதியாக 2022 பெப்ருவரி 25 ஆம் திகதி பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்டது.

1.1.4 பிரதான நடவடிக்கைகள் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மை

இலங்கையின் முறைமையான புவிச்சரிதவியல் வரைபடத்தைத் தயாரிப்பதைப் பொறுப்பேற்றல் அத்துடன் புவிச்சரிதவியல் வரைபடங்களைத் தயாரித்தல், இலங்கையின் கனிப்பொருள் மூல வளங்களை இனங்காணுதல் மற்றும் மதிப்பிடுதல், அத்தகைய

கனிப்பொருட்களை அகழ்வு செய்வதற்கும் பதனிடுவதற்கும் அத்துடன் ஏற்றுமதி செய்வதற்குமான வர்த்தக வாய்ப்பை மதிப்பிடுதல், உரிமங்களை வழங்குவதன் மூலம் கனிப்பொருட்களுக்காக அகழ்ந்தெடுத்தலையும் தோண்டுதலையும் அத்துடன் கனிப்பொருட்களைப் பதனிடுவதையும் வியாபாரம் செய்வதையும் ஒழுங்குபடுத்தல், வர்த்தக அடிப்படையில் கனிப்பொருட்களைப் பரித்தெடுத்தலையும் உற்பத்தி செய்தலையும் ஊக்குவிப்பதற்குப் பின்பற்றப்பட வேண்டிய வழிவகைகள் தொடர்பாக அமைச்சருக்கு ஆலோசனைகளை அளித்தல், சட்டத்தின் கீழ் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது பெற்றுக்கொள்ளப்படும் தகவல்கள் மற்றும் தரவுகள் என்பவற்றை பொருத்தமான ஊடகங்களில் பிரச்சாரம் செய்தல், பொறியியல்சார் புவிச்சரிதவியல் தொடர்பான கருத்திட்டங்களை பொறுப்பேற்றல் மற்றும் புவியியல்சார் அபாயங்கள் மற்றும் பேரழிவுகள் தொடர்பாக ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் தீர்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

1.1.5 தயாரிப்பின் அடிப்படை

(அ)இணக்கக் கூற்று

நிதிக் கூற்றுக்களில் நிதிநிலை அறிக்கை, விரிவான வருமான அறிக்கை, உரிமை மாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் ஆகியவை உள்ளடங்கும். இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின்படி இந்த கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஆ) நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2021 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் IFRS இலக்கம் 10 இன் பிரகாரம் மாற்றப்பட்டுள்ளது.

(இ) அளவீட்டுக்கான அடிப்படை

தொடர்புடைய குறிப்புகளில் சீர் மதிப்புப் பெறுமதிக்கான பொருத்தமான வெளிப்பாடுகள் செய்யப்படும் சந்தர்ப்பங்களைத் தவிர, வரலாற்றுக் கிரய அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(ஈ) ஒப்பீட்டுத் தகவல்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் இந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தால் வெளியிடப்பட்ட பொதுத்துறை கணக்கீட்டு தரநிலைத் தொகுதிகள் 1, 11 மற்றும் 111 ஆகியவற்றை அறிக்கையிடும்போது அனைத்து காலகட்டங்களுக்கும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டுள்ளன.

நிதிநிலை அறிக்கைகளில் உள்ள பொருட்களின் சமர்ப்பணம் அல்லது வகைப்பாடு திருத்தப்பட்டுள்ளபோது, சிறந்த சமர்ப்பணத்தை வழங்குவதற்காக தற்போதைய ஒப்பீட்டுத் தொகைகளும் மீள்வகைப்படுத்தப்பட்டுள்ளன என்பதும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே SLPSAS மற்றும் திறைசேரி வழிகாட்டல்களின்படி நிலையான சொத்துக்கள், நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் உரிமையாண்மை வகைப்பாட்டுப் பிழைகள் சரி செய்யப்பட்டுள்ளன.

(உ) நிதி மற்றும் சமர்ப்பிக்கும் நாணயம்

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்திற்கான தொழிற்பாட்டு மற்றும் சமர்ப்பண நாணயமாகிய இலங்கை ரூபாவினால் இந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை ரூபாவினால் வழங்கப்பட்டுள்ள அனைத்து நிதிசார் தகவல்களும் வேறு வகையில் குறிப்பிடப்படாத பட்சத்தில், அண்மித்த ரூபாவிற்கு மட்டந்தட்டப்பட்டுள்ளன.

(ஊ) மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்கள் பயன்படுத்தப்படுதல்

பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் ஆனது கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் மதிப்பீடுகள் என்பவற்றுக்கான அறிக்கையிடப்பட்ட தொகைகள் பயன்படுத்தப்படுதல் மீது தாக்கம் ஏற்படுத்தும் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை மேற்கொள்வதற்காக முகாமைத்துவத்தைத் தேவைப்படுத்துகின்றன. பயன்படுத்தப்பட்ட மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றிலிருந்து உண்மையான பெறுபேறுகள் மாற்றமடையலாம்.

மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை அனுமானங்கள் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும். சிராய்வானது குறிப்பிட்ட காலப்பகுதியை மட்டும் பாதிக்குமானால் அல்லது சீராய்வு காலப்பகுதி மற்றும் எதிர்கால காலப்பகுதிகளை பாதிக்குமானால், நிகழ்கால மற்றும் எதிர்கால காலப்பகுதி ஆகிய இரண்டினையும் சீராய்வு பாதிக்குமானால் கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான சீராய்வுகள் திருத்தப்படும்.

நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்ட தொகைகள் மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தும் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பயன்படுத்துதல் சம்பந்தமான முக்கியமான தீர்மானங்கள், நிச்சயமற்ற தன்மைகள், தனித்துவமான மதிப்பீட்டுத் துறைகள் பற்றிய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகளில் உள்ளடக்கப்படுகின்றன.

1.1.6 நிதிக் கூற்றுக்களில் வரவு செலவுத்திட்ட தகவல்களை வழங்குதல்

ஆண்டுக்காக பணிப்பாளர் சபையால் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டமானது குறித்த வரவுசெலவுத்திட்டத்தில் நிதியை மீண்டும் ஒதுக்க வேண்டியதன் காரணமாகவும், சில சந்தர்ப்பங்களில் பணியகத்தின் செயற்பாடுகளை மேற்கொள்ள எடுக்கப்பட்ட முடிவுகளின் காரணமாகவும் திருத்தப்பட்டது.

1.2 சொத்துக்களும் மதிப்பீட்டின் அடிப்படையும்

1.2.1 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

(அ) இனங்காணலும் அளவீடும்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கிரயத்தில் அல்லது அவற்றின் சீர்மதிப்பிலிருந்து திரண்ட தேய்மானம் அல்லது சேத இழப்பு நட்டங்கள் கழிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ளன.

நிலையான சொத்துகளின் குறைந்தபட்ச பெறுமதியை 5,000 ரூபாவாக ஜீ.எஸ். எம்.பி கருதுவதோடு ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் உள்ள அனைத்துப் பொருட்களும் ஆரம்பத்தில் திரண்ட தேய்மானம் அல்லது சேத இழப்புகள் கழிக்கப்பட்டு கிரயத்தில் பதிவு செய்யப்படுகின்றன. ஒரு சொத்தின் குறிப்பிடத்தக்க கூறுகள் தனித்தனியாக அடையாளம் காணப்பட்டு தேய்மானம் செய்யப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் குறிப்பிடத்தக்க பகுதிகள் கால இடைவெளிகளில் மாற்றப்பட வேண்டியிருக்கும் போது, அந்த நிறுவனம் மாற்றப்பட்ட பகுதியை ஏற்பிசைவிலிருந்து விலக்கி, புதிய பகுதியை அதன் சொந்த பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் தேய்மானத்துடன் ஏற்பிசைவு செய்கின்றது. ஏனைய அனைத்து திருத்த மற்றும் பராமரிப்புச் செலவுகளும் அவை மேற்கொள்ளப்பட்ட விதத்தின்படி வருமானக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

(ஆ) கிரயம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயத்தில் அதன் கொள்முதல் விலை மற்றும் குறிப்பிட்ட சொத்தினை அதன் மூலம் எதிர்பார்க்கப்படும் பயனைப் பெற்றுக்கொள்ளக்கூடிய பணி நிலைக்குக் கொண்டு வருவதற்கான எந்தவொரு நேரடியாக உடைமையாக்கத்தக்க செலவும் அடங்கும்.

சொத்துக்களின் ஈட்டல் திறனைத் தொடர்ச்சியாகப் பேணிச் செல்ல அல்லது அதிகரிப்பதற்காக நிரந்தர இயல்புடைய சொத்துக்களைப் பெறுதல், விரிவாக்குதல் அல்லது மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கான அடுத்தடுத்த செலவுகள்

மூலதனச் செலவாகக் கருதப்படுகின்றன.

முக்கியமான பரிசோதனை மற்றும் பழுதுபார்ப்புச் செலவுகள் உள்ளிட்டதாக தனித்தனியாக கணக்குப்பதியப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றில் உள்ளடங்கியுள்ள ஒரு கூறினை மீள்நிலைபடுத்தலுக்கான செலவு மூலதனமாக்கப்படுவது, அப்பகுதியில் உள்ளடங்கியுள்ள எதிர்கால பொருளாதார நன்மைகள் ஜீ.எஸ்.எம்.பி இற்கு கிடைக்கப்படுமானால் மற்றும் அதன் கிரயத்தினை நம்பத்தகுந்த முறையில் அளவிட முடியுமானால் மட்டுமேயாகும்.

(இ) மீள்நிலைப்படுத்தல் கிரயம்

முதலில் மதிப்பிடப்பட்ட செயல்திறனிலிருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்கால பொருளாதார நன்மைகளை மீள்நிலைப்படுத்துவதற்காக அல்லது பேணிச் செல்வதற்காக ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை பழுதுபார்ப்பதில் அல்லது பராமரிப்பதில் ஏற்படும் செலவானது செலவு மேற்கொள்ளப்படும்போது ஒரு செலவாக இனங்காணப்படுகின்றது.

(ஈ) தேர்ந்தெடுக்கப்பட்ட சில வகை சொத்துக்களின் மீள்மதிப்பீடு

தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்பிட்ட வகையைச் சேர்ந்த நிலையான சொத்துக்களை மட்டும் மீள் மதிப்பீடு செய்ய பணியகம் முடிவு செய்ததுடன் குருநாகல், மஹகந்தராவ மற்றும் ஹக்மனயிலுள்ள கட்டடங்கள் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதான மதிப்பீட்டாளரால் மீள் மதிப்பீடு செய்யப்பட்டன.

எவ்வாறாயினும், மதிப்பீடு செய்யப்பட்ட பொருட்களின் வகைப்படுத்தல் விபரமொன்றை எங்களுக்கு அனுப்புமாறு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு நாங்கள் எழுதியுள்ளோம். இந்த கணக்கீட்டு ஆண்டின் இறுதியில் ஒரு சுருக்கம் மட்டுமே ஜீ.எஸ்.எம்.பி.க்கு அனுப்பப்பட்டிருப்பதால், அத்தகைய விவரங்கள் கிடைத்த பின்னர் மட்டுமே மீள்மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் பற்றிய குறிப்புக்களை கணக்குப் புத்தகங்களில் உள்ளடக்க முடியும்.

ஜீ.எஸ்.எம்.பி அத்தகைய சொத்துக்களை ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் ஒருமுறை மீள் மதிப்பீடு செய்வதனை ஒரு கொள்கையாக பின்பற்றும் என்பதுடன் அடுத்த நிதியாண்டின்போது மோட்டார் வாகனங்களையும் தொடர்பாடல் சாதனங்களையும் அது மீள் மதிப்பீடு செய்யும்.

(உ) தேய்மானம்

பின்வரும் மதிப்பிடப்பட்ட பயனுள்ள ஆயுட்காலத்தின் மீது இறையிலி நிலங்களைத் தவிர அனைத்து ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயத்தினைப் பதிவழிப்பதற்காக அவற்றுக்கான கிரயத்தின் மீது நேர் கோட்டு முறையின் அடிப்படையில் விரிவான வருமான கூற்றிற்கு தேய்மானம் பொறுப்பிக்கப்படும்.

ஒரு சொத்தின் தேய்மானம் ஆனது அது பயன்பாட்டிற்குக் கிடைக்கும்போது தொடங்குவதுடன் ஒரு சொத்து விற்பனைக்கு வைத்திருப்பதாக வகைப்படுத்தப்பட்ட திகதி மற்றும் ஒரு சொத்து குறிப்புக்களில் இனங்காணப்படுதல் நிறுத்தப்படுகின்ற திகதி ஆகிய இரண்டு திகதிகளில் முதலில் வரும் திகதியில் தேய்மானம் நிறுத்தப்படும்.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஒரு பொருள் அகற்றப்பட்டவுடன் அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து எதிர்கால பொருளாதார நன்மைகள் எதுவும் எதிர்பார்க்கப்படாதபோது அகற்றப்படும். சொத்துக்கள் அகற்றப்படுகின்ற ஆண்டின் விரிவான வருமானக் கூற்றில் சொத்துக்களை அகற்றுவதன் மீதான ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் உள்ளடக்கப்படும்.

பயன்படுத்தப்படும் பிரதான ஆண்டு விகிதங்கள்:-

சொத்து வகை	பயனுள்ள ஆயுட்காலம்	தேய்மானத்தின் வீதம்
கட்டிடங்கள் மற்றும் பிரிப்புகள்	20 வருடங்கள்	5%
வேலியிடல்	5 வருடங்கள்	20%
பொறி & இயந்திரங்கள்	8 வருடங்கள்	12.5%
ஆய்வுகூட உபகரணங்கள்	5 வருடங்கள்	20%
மோட்டார் வாகனங்கள்	5 வருடங்கள்	20%
தளபாடங்களும் பொருத்திகளும்	10 வருடங்கள்	10%
அலுவலக உபகரணங்கள்	5 வருடங்கள்	20%
கள உபகரணங்கள்	5 வருடங்கள்	20%
வரைபட உபகரணங்கள்	5 வருடங்கள்	20%
தொடர்பாடல் உபகரணங்கள்	8 வருடங்கள்	12.5%
நூலக நூல்களும் வரைபடங்களும்	20 வருடங்கள்	5%
மென்பொருள் துணைக்கருவிகள்	5 வருடங்கள்	20%
கணினி துணைக்கருவிகள்	5 வருடங்கள்	20%

GSMB தொழில்நுட்பச் சேவைகள் (பிரைவேட்) லிமிடெட்டின் அனைத்து சொத்துக்களும் தேய்மானத்தை வழங்கும் நோக்கத்திற்காக 4 ஆண்டு (25%) ஆயுட்காலமாக கருதப்பட்டுள்ளன.

1.2.2 இடம்பெற்று வரும் வேலைகள்

பிற்றகோட்டையில் ஆய்வகக் கட்டடப் பணிகள், இரத்னபுரி, பொலனறுவை, அம்பாறை மற்றும் குருநாகல் ஆகிய இடங்களிலுள்ள பிராந்திய அலுவலகங்களின் பணிகள் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை. ஆகவே, கணக்காண்டின் இறுதியில் ஒவ்வொரு கட்டுமானத் தளத்திலும் பூர்த்தி செய்யப்பட்ட சதவீதத்தையும் பெறுமதியையும் உறுதிப்படுத்தும் சான்றிதழொன்றை தகுதிவாய்ந்த சிவில் பொறியியலாளர் திரு. கே.ஏ. முனசிங்க (பட்டயப் பொறியாளர்) அவர்களிடமிருந்து நாம் பெற்றுக்கொண்டுள்ளோம். அம்பாறை புத்தங்கல சுனாமி GFZ நிலையத்தின் நிர்மாணப் பணிகள் 2021 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

1.2.3 பொருட் பட்டியல்

குறைந்த கிரயம் மற்றும் நிகர தேறிய பெறுமதி மீது சரக்குத் தொக்குகள் குறிப்பிடப்படுகின்றன. நிகர தேறிய பெறுமதி என்பது மதிப்பிடப்பட்ட பூர்த்தி செய்வதற்கான கிரயம் மற்றும் விற்பனைச் செலவுகள் கழிக்கப்பட்ட சாதாரண வணிக நடவடிக்கைகளின்போது மதிப்பீடு செய்யப்பட்ட விற்பனை விலையாகும். வழக்கற்றுப்போன மற்றும் மெதுவாக நகரும் பொருட்களின் சேதம் கழிக்கப்பட்ட பொருட்களைக் கைப்பற்றுதல் மற்றும் அவற்றை தற்போதுள்ள இடத்திற்கும் நிலைமைக்கும் கொண்டுவருதல் என்பவற்றுக்காக மேற்கொள்ளப்படுகின்ற செலவினம் கிரயத்தில் உள்ளடங்கும். ஜீ.எஸ்.எம்.பி இருப்புக்களை வழங்கும்போது முதலில் கிடைக்கப்படும் பொருட்களை முதலில் விநியோகிக்கும் முறையைப் பயன்படுத்துகின்றது.

1.2.4 சொத்துக்களின் சேத இழப்பு

ஏதேனும் சேத இழப்புத் தொடர்பான அறிகுறி உள்ளதா என்பதை தீர்மானிக்க ஒவ்வொரு சொத்தும் பற்றிய அறிக்கையிடல் தேதியிலும் சொத்துக்களை முன்னெடுத்துச் செல்லும் தொகை மீளாய்வு செய்யப்படும். அத்தகைய ஏதேனும் சேத இழப்புத் தொடர்பாக பதிவாகும் பட்சத்தில், சொத்தின் வசூலிக்கக்கூடிய தொகை

மதிப்பீடு செய்யப்படும். ஒரு சொத்தின் முன்னெடுத்துச் செல்லப்படும் தொகை அல்லது பணப் பிறப்பாக்க அலகு அதன் வசூலிக்கக்கூடிய தொகையை கடந்து செல்லுமானால் சேத இழப்பு இனங்காணப்படும். வசூலிக்கக்கூடிய தொகையை தீர்மானிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் மதிப்பீடுகளில் மாற்றம் ஏற்பட்டால் சேத இழப்பு எதிர்மறையாக்கப்படும்.

1.2.5 நிதிச் சொத்துக்கள்

குறிப்பிட்ட தொகைகளை எதிரீடு செய்ய ஜீ.எஸ்.எம்.பி.க்கு சட்டப்பூர்வ உரிமை உள்ளபோது மற்றும் சொத்தினை கைகூடச் செய்து பொறுப்புகள் தீர்க்கப்படுவது ஒரே தடவையில் மேற்கொள்ளப்படுதல் அல்லது நிகர அடிப்படையில் தீர்க்கப்படுதல் ஆகிய இரண்டில் ஒன்றினை மேற்கொள்வதற்குக் கருதும் சந்தர்ப்பத்தில் மட்டும் நிதிநிலைக் கூற்றில் நிதிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் எதிரீடு செய்யப்பட்டு தேறிய தொகை சமர்ப்பிக்கப்படும்.

ஜீ.எஸ்.எம்.பி. இன் நிதி சொத்துக்களில் பணம் மற்றும் குறுகிய கால முதலீடுகள் மற்றும் வர்த்தக மற்றும் பிற வருமதிகள் அடங்கும்.

(அ) கடன்களும் வருமதிகளும்

கடன் மற்றும் வருமதிகள் என்பதில் வர்த்தக வருமதிகள், பணியாளர்களுக்கான கடன்கள், வைப்புத்தொகைகள், முற்பணம், பிற வருமதிகள் மற்றும் காசும் காசுக்குச் சமமானவைகளும் உள்ளடங்கும்.

ஒப்பந்தத் தொகையின் மீதுள்ள பணியாளர் கடன்களை பதிவு செய்து சமர்ப்பிக்க ஜீ.எஸ்.எம்.பி தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகின்றது.

(ஆ) பருவ முதிர்வு வரை வைத்திருக்கப்படும முதலீடுகள் (**HTM**)

முதிர்வடையும் வரை தடுத்துவைப்பதற்கு ஜீ.எஸ்.எம்.பி.க்கு சாதகமான எண்ணம் மற்றும் இயலுமை உள்ளபோது நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய செலுத்தல்களுடனான நேரிலியற்ற நிதிச் சொத்துக்கள் மற்றும் நிலையான முதிர்வுகள் என்பவை பருவ முதிர்வு வரை வைத்திருக்கப்படுபவைகளாக வகைபடுத்தப்படும். அரசாங்கப் பிணையங்கள் மற்றும் நிலையான வைப்புகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடுகள் பருவ முதிர்வு வரை வைத்திருக்கப்படும் முதலீடுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

(இ) தீவிர நோய் மற்றும் நலனோம்பல் நிதி / உலகலாவிய நில அதிர்வு வலையமைப்பு (**GSN**)

கடந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் காட்டப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலையான வைப்புத்தொகைகள் இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பாக தனித்தனியாக வெளியிடப்பட்டுள்ளன.

தீவிர நோய் மற்றும் நலனோம்பல் நிதி FD - 40,789,153.33

உலகலாவிய நில அதிர்வு வலையமைப்பு (GSN) - 12,814,733.43

1.2.6 நிதிச் சொத்துக்களின் சேத இழப்பு

ஒவ்வொரு அறிக்கையிடல் தேதியிலும் ஒரு நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துக்களின் ஒரு தொகுதி சேத இழப்புக்கு உள்ளாகியுள்ளதா என்பதற்கு ஏதேனும் விடய அடிப்படையிலான சான்றுகள் உள்ளதா என ஜீ.எஸ்.எம்.பீயால் மதிப்பீடு செய்யப்படுவதோடு, அத்தகைய சேத இழப்பு ஏற்பட்டிருப்பின், சொத்தின் முன்கொண்டு செல்லப்படும் பெறுமதி மற்றும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள எதிர்கால நிதிப் பாய்ச்சலின் தற்போதைய பெறுமதி என்பவற்றுக்கு இடையிலான வித்தியாசத்தை எடுத்துக்கொள்வதன் மூலம் சேத இழப்பு கணக்கிடப்படும்.

1.2.7 காசும் காசுக்குச் சமமானவைகளும்

கையில் உள்ள பணம் மற்றும் வங்கியில் உள்ள வைப்பு ஆகியவை காசும் காசுக்குச் சமமானவைகளில் அடங்கும்.

2021 ஆம் ஆண்டில் தொடர்புடைய பகுதிகளில் உள்ள அனைத்து பிராந்திய அலுவலகங்களுக்கும் வங்கிக் கணக்குகளைத் திறக்க GSMB இன் முகாமைத்துவ சபை முடிவு செய்துள்ளது.

1.3 பொறுப்புகள் மற்றும் ஏற்பாடுகள்

நிதி நிலைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களாக வகைபடுத்தப்பட்டிருப்பது கோரிக்கை விடுக்கப்படக்கூடிய சந்தர்ப்பத்தில் அல்லது அறிக்கையிடல்

தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டிய பொறுப்புக்களாகும். அறிக்கையிடல் தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்னர் செலுத்த வேண்டிய நிலுவைகள் நடைமுறையல்லா பொறுப்புக்கள் ஆகும்.

இந்த நிதிநிலைக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் அறியப்பட்ட அனைத்து பொறுப்புகளும் கணக்கிடப்பட்டுள்ளன. கடந்த நிகழ்வின் விளைவாக ஜீ.எஸ்.எம்.பி.க்கு சட்டரீதியான அல்லது அமைப்பு வழி பொறுப்பு காணப்படுகின்றபோது ஏற்பாடுகளும் பொறுப்புகளும் இனங்காணப்படுகின்றன என்பதுடன் பொறுப்பினைத் தீர்ப்பதற்கு பொருளாதார நன்மைகளின் வெளிப்பாய்ச்சல் அவசியமாகும்.

1.3(அ) ஜீஎஸ்எம்பிக்கு எதிராக மாவட்ட நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றத்தில் 28 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், முறைப்பாட்டாளர்கள் இழப்பீடு கோரியுள்ள போதிலும், இரண்டு வழக்குகளுக்கான பொறுப்பை சட்டப் பிரிவு அடையாளம் காணவில்லை.

1.3(ஆ) பணியகம் உரிமம் வழங்குவதை நிராகரித்தால், வாடிக்கையாளர்களிடம் இருந்து பெறப்பட்ட பரிசோதனை வருமானத் தாிலிருந் து வாடிக் கையாளர் களின் கோரிக்கையின் மீது செலுத்தல்களை மேற்கொள்ள ஜீஎஸ்எம்பீ ஏற்பாடுகளை செய்துள்ளது.

1.3.1 அறவிடமுடியாக் கடன்களும் ஐயக் கடன்களுக்குமான ஏற்பாடுபாடுகள்

கடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதனை பணியகம் மட்டுப்படுத்தியுள்ள போதிலும் ஏற்கனவே கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களின் மீது பொறுப்பேற்கப்பட்ட கருத்திட்டப் பணிகள் தொடர்பில் நீண்டகாலமாக ஜீ.எஸ்.எம்.பிக்கு அறவிடப்பட வேண்டிய பணத்தொகை காணப்படுவதோடு பின்வரும் அளவுகோல்களைக் கொண்டு செலுத்தப்படாதுள்ள அத்தகைய தொகைகளுக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடனாளிகளால் செலுத்தப்படாதுள்ள தொகை	ஒரு வருடத்திற்குக் குறைவான காலமாக செலுத்தப்படாதுள்ள (0- 1 வருடம்)	ஒரு வருடத்திற்கு மேற்பட்ட மற்றும் இரண்டு வருடங்களுக்குக் குறைந்த காலமாக செலுத்தப்படாதுள்ள (1 -2 வருடங்கள்)	இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட மற்றும் மூன்று வருடங்களுக்குக் குறைந்த காலமாக செலுத்தப்படாதுள்ள (2 – 3 வருடங்கள்)	மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட மற்றும் நான்கு வருடங்களுக்கு குறைந்த காலமாக செலுத்தப்படாதுள்ள (3 - 4 வருடங்கள்)	ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செலுத்தப்படாதுள்ள (5 வருடங்களுக்கு மேல்)
ஏற்பாட்டின் அளவு	ஏற்பாடுகள் இல்லை	கடனாளிகள் செலுத்த வேண்டிய தொகையில் 40%	கடனாளிகள் செலுத்த வேண்டிய தொகையில் 50%	கடனாளிகள் செலுத்த வேண்டிய தொகையில் 60%	100% வீதமான ஏற்பாடுகள்

1.3.2 கொடைகள்

(அ) கொடைகளை கணக்குப் பதிதல்

ஜீ.எஸ்.எம்.பி.யினால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை ஈடுசெய்யும் கொடைகள் குறித்த செலவுகள் இனங்காணப்பட்ட அதே காலகட்டத்தில் விரிவான வருமானக் கூற்றில் வருவாயாக இனங்கானப்படுகின்றன. ஒரு சொத்தின் கிரயத்தினை ஜீ.எஸ்.எம்.பி.க்கு ஈடுசெய்யும் கொடைகள் தொடர்புடைய சொத்தின் பயனுள்ள ஆயுட்காலம் குறித்த முறையான அடிப்படையில் விரிவான வருமானக் கூற்றில் இனங்கானப்படுகின்றன.

1.3.3 பணியாளர்களுக்கான பயன்கள்

(அ) இளைப்பாறல் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்

தகுதிவாய்ந்த அனைத்து ஊழியர்களுக்கும் 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை செலுத்தல் சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள பயன் திட்டத்தை ஜீஎஸ்எம்பி ஏற்றுக்கொண்டுள்ளது. பயன் திட்டத்திற்காக நிதியளிக்கப்படவில்லை. பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 - பணியாளர்களுக்கான பயன்களின் வழிகாட்டுதலை கருத்திற்கொண்டு ஜீஎஸ்எம்பி யினால் பணிக்கொடைக்காக நிதி ஏற்பாடுகள் கணக்கிடப்படுகின்றது.

பொதுவாக வயது, சேவை செய்த ஆண்டுகளின் எண்ணிக்கை மற்றும் இழப்பீடு போன்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட காரணிகளைச் சார்ந்து வரையறுக்கப்பட்ட பயன் திட்டங்களானவை ஒரு ஊழியர் இளைப்பாறும்போது பெறும் நன்மையின் அளவை மதிப்பிடுகின்றன.

(ஆ) வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்

வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் என்பது ஒரு வேலைவாய்ப்புக்குப் பிந்தைய திட்டமாகும் என்பதோடு இதன்கீழ் ஒரு நிறுவனம் நிலையான பங்களிப்பை பிறிதொரு தனி நிறுவனத்திற்குச் செலுத்துகின்றது. மேலும் கூடுதல் தொகையை செலுத்த சட்டரீதியான அல்லது அமைப்பு வழி பொறுப்பு ஏற்படமாட்டாது. வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்காக பங்களிப்புத் தொகை செலுத்துவதற்கான பொறுப்புகள் அப்பொறுப்புகள் ஏற்படும் வகையில் மற்றும் ஏற்படும்போது விரிவான வருமானக் கூற்றில் செலவாக ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

(இ) ஊழியர் சேமலாப நிதி

ஜீ.எஸ்.எம்.பி மற்றும் ஊழியர்கள் என்போர் ஊழியரின் சம்பளத்தில் முறையே 15% மற்றும் 10%ஐ ஊழியர் சேமலாப நிதிக்கு பங்களிக்கின்றனர்.

இருப்பினும், ஊழியர்களின் பங்களிப்புகளின் சரியான விகிதத்தை பேணிச் செல்வதற்காக தொழில் திணைக்களத்துடன் ஜீ.எஸ்.எம்.பி.கலந்துரையாடல் நடத்தியுள்ளது.

(ஈ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

ஒவ்வொரு ஊழியரின் சம்பளத்திலும் 3%ஐ ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு ஜீ.எஸ்.எம்.பி பங்களிக்கின்றது.

1.3.4 வர்த்தக மற்றும் பிற செலுத்த வேண்டியவை

வர்த்தக மற்றும் பிற செலுத்த வேண்டியவை கிரயத்தில் குறிப்பிடப்படுகின்றன.

1.3.5 வரி விதிப்பு

2016 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க புதிய உள்நாட்டு இறைவரிச் சட்டம் ஆகியவற்றின் படி வரிவிதிப்பு நோக்கங்களுக்காக சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்ட வகையில் ஆண்டிற்கான இலாபத்தின் அடிப்படையில் வரிவிதிப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 2018.04.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தமது மொத்த வருவாய் மீது பணியகம் வருமான வரி செலுத்த வேண்டிய பொறுப்புக்கு உட்படுவதோடு நடைமுறைக்கு வரும் திகதிக்குப் பின்னர் வருவாய்க்கு 24% என்ற விகிதத்தில் வரிகள் கணக்கிடப்படும்.

ஜீ.எஸ்.எம்.பி பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்தும் (வற்) பொறுப்புக்கு உட்படுவதோடு பெறுமதி சேர்க்கப்பட்ட வரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்பட்டுள்ளது. செலுத்த வேண்டிய வற் மற்றும் / அல்லது மீட்டெடுக்கக்கூடிய தொகைகள் விரிவான வருமானக் கூற்றில் பிரதிபலிக்கின்றன.

1.3.6 பிற்போடப்பட்ட வரிவிதிப்பு

ஐந்தொகை தேதிக்கு பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு 49,919,112.00. ரூபாவாகும்.

1.3.7 வெளிநாட்டு நாணய கொடுக்கல் வாங்கல்கள்

கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் நடைமுறையிலிருந்த அந்நியச் செலாவணி விகிதங்கள் மீது அனைத்து அந்நியச் செலாவணி கொடுக்கல் வாங்கல்களும்

அறிக்கையிடல் நாணயமாகிய இலங்கை ரூபாவாக மாற்றப்படுகின்றன.

1.3.8 மூலதன கடப்பாடுகள் மற்றும் நிகழ்தகு (பரிப்புகள்)பொறுப்புகள்

நிகழ்தகு பொறுப்புகள் என்பது சாத்தியமான கடப்பாடுகளாகும் என்பதோடு பொருளாதார நன்மைகளை மாற்றுவது சாத்தியமில்லாத அல்லது நம்பத்தகுந்த முறையில் அளவிட முடியாத அவற்றின் இருப்பு நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிகழ்கால பொறுப்புக்கள் மூலம் மட்டும் உறுதிபடுத்தப்படுகின்றன. GSMB இன் மூலதன கடப்பாடுகள் மற்றும் நிகழ்தகு பொறுப்புகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி வெளிப்படுத்தப்படுகின்றன.

ஜீ.எஸ்.எம்.பி 2010-2011 காலகட்டத்தில் பதுளை பிராந்திய அலுவலகத்திற்கான வளாகத்தை வாடகைக்குப் பெற்றிருந்ததோடு அங்கு தீ விபத்து ஏற்பட்டது. ஜீ.எஸ்.எம்.பியின் கவனக்குறைவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டது என்பது ஆதன உரிமையாளரின் கருத்தாக அமைந்ததோடு வழக்கு இலக்கம் M 7523 இன் கீழ் பதுளை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்துள்ளார். எவ்வாறாயினும், ஆதன உரிமையாளருக்கு ரூ.1.2 மில்லியன் செலுத்த நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. எனவே, ஜீஎஸ்எம்பி 2022 ஆம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் இருந்து சேதங்களைச் செலுத்த நிதியை ஒதுக்கியது.

1.4 விரிவான வருமானக் கூற்று

1.4.1 வருமானம் இனங்காணப்படுதல்

ஜீ.எஸ்.எம்.பி.க்கு பொருளாதார நன்மைகள் வரக்கூடிய மற்றும் அதை நம்பத்தகுந்த வகையில் அளவீடு செய்யக்கூடிய அளவிற்கு வருவாய் இனங்காணப்படும். வர்த்தக தள்ளுபடிகள் மற்றும் விற்பனை வரிகளின் பெறப்பட்ட அல்லது பெறத்தக்க நிகரத்தின் சீர் மதிப்பில் வருவாய் அளவிடப்படுகின்றது. வருவாயை இனங்காணபதற்கான நோக்கத்திற்காக பின்வரும் குறிப்பிட்ட அளவுகோள்கள் பயன்படுத்தப்படுகின்றன.

(அ) அரசுரிமை வருமானம்

1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி இலக்கம் 794/23 இன் பிரிவு ஐந்து (5) இன் படி அரசுரிமையை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. GSMB இன் தொழிற்பாட்டுச் செலவினத்திற்கு நேரடியாக ஏற்புடையதாக அமையததால், ஆண்டில் பொதுத் திறைசேரிக்கு மேற்கொள்ளப்பட்ட அரசுரிமை மாற்றல்கள் உரிமையாண்மையின் மாற்றங்களில் சீர் செய யப்பட்டன.

(ஆ) வட்டி வருமானம்

சொத்துக்களின் பயனுள்ள வருமானத்தைக் கருத்திற்கொள்ளும் நேர விகித அடிப்படையில் வட்டி வருமானம் இனங்கானப்படுகின்றது.

(இ) வேறு வருமானம்

பிற வருமானம் அட்டுறு அடிப்படையில் இனங்கானப்படுகின்றது.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் பிற நடைமுறையல்லா சொத்துக்களை அகற்றுவதன் மூலம் ஏற்படுகின்ற வருவாய் இயல்பின் நிகர இலாபங்கள் மற்றும் நட்டங்கள் அவை அகற்றப்படும்போது கிடைக்கப்படுகின்ற தொகையிலிருந்து சொத்துக்கான முன்கொண்டு செல்லப்படும் பெறுமதி மற்றும் தொடர்புடைய விற்பனை செலவுகள் கழிக்கப்பட்டு கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

(ஈ). அரச கொடைகள்

அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான அரசாங்கக் கொடைகள் வருவாய் மற்றும் பிற்போடப்பட்ட வருவாயின் தன்மையைக் கருத்தில் கொண்டு வருமான அணுகுமுறையின் கீழ் கணக்கிடப்படுகின்றன.

(உ) முதலீட்டு வருமானம்

துணை நிறுவனத்திடமிருந்து இது வரை பங்கிலாபமாக வருமானம் கிடைக்கப்பெறவில்லை. ஆயினும், 2021 ஆம் ஆண்டில் இந்த பங்கிலாப வருமானம் கிடைக்கும்.

2020 ஆம் ஆண்டுக்குரிய பங்குலாப வருமானம் ரூ.2 மில்லியன் 2021 இல் பெறப்பட்டது. ஆயினும், 2021 ஆம் ஆண்டிற்கான பங்குலாபம் இன்னும் துணை நிறுவனத்திடமிருந்து பெறப்படவில்லை. இருப்பினும், இந்த பங்குலாப வருமானம் 2022 ஆம் ஆண்டில் பெறப்படலாம்.

1.4.2 செலவினம்

செலவினங்களுக்கும் வருமானத்தின் விசேட பொருட்களின் ஈட்டல்களுக்கும் இடையிலான நேரடி தொடர்பின் அடிப்படையில் வருமானக் கூற்றில் செலவுகள் இனங்காணப்படுகின்றன. ஆண்டுக்கான இலாபத்தைக் கணக்கிடும்போது

வினைத்திறன்மிக்க நிலையில் வணிகத்தை நடத்துவதற்கும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை பராமரிப்பதற்கும் ஏற்படும் அனைத்து செலவுகளும் வருமானத்திற்கு பொறுப்பிக்கப்பட்டுள்ளன.

(அ) GSMB இன் முக்கிய பிரிவுகளாக சுரங்கப் பிரிவு மற்றும் புவிச்சரிதவியல் பிரிவு

ஆகியவற்றில் மேற்கொள்ளப்படும் செலவினங்கள் தொழிற்பாட்டு நடவடிக்கைகளில்

அடங்கும்.

(ஆ) நிர்வாகச் செலவில் 2021 ஆம் ஆண்டில் பிற துணைப் பிரிவுகளின் செலவினங்களுக்காகச்

மேற்கொள்ளப்பட்ட செலவினங்களும் அட ங்கும்.

1.5 நிதிப் பாய்ச்சல் கூற்று

இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 2 க்கு அமைவாக நிதிப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

செலுத்தப்பட்ட வட்டியானது தொழிற்பாட்டு நிதிப் பாய்ச்சலாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் பெறப்பட்ட வட்டியானது முதலீட்டு நிதிப் பாய்ச்சலாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1.6 அறிக்கையிடும் தேதிக்குப் பின்னர் இடம்பெறும் நிகழ்வுகள்

அறிக்கையிடல் தேதிக்குப் பின்னர் இடம்பெறும் நிகழ்வுகள் ஆராய்ந்து பார்க்கப்படுவதோடு தேவையான சந்தர்ப்பங்களில் பொருத்தமான மாற்றங்கள் கணக்குகளில் செய்யப்படுகின்றன.

நிதிக் கூற்றுக்களில் பொருண்மையான சீராக்கல்கள் அல்லது வெளிப்படுத்தல்களை தேவைப்படுத்தும் எந்தவொரு சூழ்நிலையும் அறிக்கையிடும் தினத்திலிருந்து உருவாகவில்லை.

1.7 தொடர்புடைய தரப்புகளின் கொடுக்கல் வாங்கல்கள்

அறிக்கையிடல் தேதியில் எந்தவொரு பணிப்பாளரும் பணியகத்துடனான ஒப்பந்தங்கள் மற்றும் / அல்லது முன்மொழியப்பட்ட ஒப்பந்தங்களில் ஆர்வம் காட்டவில்லை. இருப்பினும், ஜீ.எஸ்.எம்.பி.யின் தலைவர் துணை நிறுவனத்தின் (ஜீ.எஸ்.எம்.பி தொழில்நுட்பச் சேவைகள் பிரைவேட் லிமிடெட்) தலைவராகவும் உள்ளார். ஜீ.எஸ்.எம்.பி.யின் சிரேஸ்ட சுரங்கப் பொறியியலாளர் SLRDC (அதாவது ஒரு பொது நிறுவனம்) இன் சபைப் பணிப்பாளராக உள்ளார்

1.7.1 கருதப்படு கிரயமாக சீர் மதிப்புப் பெறுமதி அல்லது மீள்மதிப்பீடு

கிரய முறையைப் பயன்படுத்தி இலங்கைப் பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதி நிலைக் கூற்றில் இறையிலி ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் காட்டப்படுகின்றன. சீர் மதிப்புப் பெறுமதியை கருதப்படு கிரயமாகப் பயன்படுத்த ஜீ.எஸ்.எம்.பி தெரிவுசெய்யவில்லை.

1.7.2 குறிப்பிடத்தக்க கணக்கீட்டுத் தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்

நிதிக் கூற்றுக்களை முன்வைக்கும்போது வருடத்தில் வழங்கப்பட்ட மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்ட நியமங்கள் ஜீ.எஸ்.எம். பி. யினால் பின்பற்றப்பட்டுள்ளன.

சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்
டிசெம்பர் 31 இல் ஒருங்கிணைந்த நிதிநிலை அறிக்கை

2020				2021	
ஜீஎஸ்எம்பீ	**குழு**	**சொத்துக்கள்**	**குறிப்பு**	**குழு**	**ஜீஎஸ்எம்பீ**
ரூபா	**ரூபா**	**நடைமுறையல்லா சொத்துக்கள்**		**ரூபா**	**ரூபா**
462,909,038	504,027,729	ஆதனம்,பொறி மற்றும் உபகரணங்கள்	1	493,727,022	464,956,754
159,045,551	159,045,551	வேலை முன்னேற்றம்	2	326,616,983	326,616,983
621,954,589	**663,073,280**	**மொத்த நடைமுறையல்லா சொத்துக்கள்**		**820,344,005**	**791,573,737**
		ஏனைய நடைமுறையல்லா சொத்துக்கள்			
4,000,000	-	முதலீடுகள்	3	-	4,000,000
51,370,580	70,636,872	பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள்	4	82,214,179	65,860,635
3,119,309,526	3,390,493,340	நிலையான வைப்புகள்	5	2,882,877,543	2,596,992,830
3,174,680,106	**3,461,130,212**	**மொத்த ஏனைய நடைமுறையல்லா சொத்துக்கள்**		**2,965,091,723**	**2,666,853,465**
		நடைமுறை சொத்துக்கள்			
32,115,617	52,025,144	களஞ்சிய பொருள் இருப்பு	6	48,759,103	31,804,432
57,584,844		வர்த்தக கடனாளிகள்	7	192,495,930	180,234,642
140,747,314	310,215,110	ஏனைய வருமதிகள்	8	221,379,926	149,541,193
-		நிறுவனங்களுக்கு இடையில்	9	27,277,360	24,092,839
16,463,224		முன்கூட்டிய செலுத்தல்களும் வைப்புகளும்	10	14,509,329	14,509,329
84,772,024	103,602,797	காசும் காசுக்குச் சமமானவைகளும்	11	199,260,399	157,916,939
331,683,022	**465,843,051**	**மொத்த நடைமுறை சொத்துக்கள்**		**703,682,048**	**558,099,374**
4,128,317,717	**4,590,046,543**	**மொத்த சொத்துக்கள்**		**4,489,117,775**	**4,016,526,577**
		உரிமையாண்மை மற்றும் பொறுப்புகள்			
		உரிமையாண்மை மற்றும் ஒதுக்கங்கள்			
2,736,894,110	2,948,639,366	ஆரம்ப உரிமையாண்மை மற்றும் ஒதுக்கங்கள்		2,778,886,771	2,612,432,098
(1,195,331,284)	(1,195,331,284)	சேர்: கடந்த வருடத்திற்கான செம்மையாக்கல்கள்		41,863,532	28,611,675
773,685,180	730,394,597	வருடத்திற்கான இலாபம்		1,560,629,821	1,552,956,756
(8,598,504)	(8,598,504)	திறைசேரிக்கு மாற்றப்பட்டது		(2,000,000,000)	(2,000,000,000)
-	86,227,336	கட்டுப்படுத்தப்படாத அக்கறை		95,689,797	-
305,782,596	305,782,596	மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்		17,241,822	17,241,822
2,612,432,098	**2,867,114,107**			**2,494,311,743**	**2,211,242,351**
4,135,178	4,135,178	கிடைத்த வெளிநாட்டு பண அனுப்பீடுகள்	12	2,370,912	2,370,912
35,750,158	35,750,159	இடர் மற்றும் ஊழியர் பயன் கணக்கு		-	-
2,652,317,434	**2,906,999,444**	**மொத்த உரிமையாண்மை மற்றும் ஒதுக்கங்கள்**		**2,496,682,655**	**2,213,613,263**
		நடைமுறையல்லா பொறுப்புகள்			
238,321,390	219,000,818	இளைப்பாறல் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள்	13	292,966,115	267,810,585
25,457,826	25,457,826	செலுத்த வேண்டிய குத்தகை - நீண்ட காலம் (வாகனம்)	16	15,964,704	15,964,704
60,253,441	61,244,360	பிற்போடப்பட்ட வரிப் பொறுப்பு	4	50,504,795	49,919,112
324,032,657	**305,703,004**	**மொத்த நடைமுறையல்லா பொறுப்புகள்**		**359,435,614**	**333,694,401**
		நடைமுறை பொறுப்புகள்			
330,949,437	734,009,295	கடன்தருநர்கள் மற்றும் செலுத்த வேண்டியவைகள்	14	643,424,633	525,013,235
194,130,301		அட்டறு செலவுகள் மற்றும் செலுத்த வேண்டிய ஏனையவை	15	249,228,756	203,859,561
13,781,772	643,334,802	செலுத்த வேண்டிய குத்தகை குறுகிய காலம் - வாகனம்	16	13,781,053	13,781,054
-		இடப்பரிசோதனை மீள்செலுத்தலுக்கான ஏற்பாடு	17	3,264,024	3,264,024
613,106,116		ஏனைய செலுத்த வேண்டியவைகள்	18	723,301,038	723,301,038
1,151,967,626	**1,377,344,096**	**மொத்த நடைமுறை பொறுப்புகள்**		**1,632,999,505**	**1,469,218,912**
1,476,000,283	**1,683,047,099**			**1,992,435,120**	**1,802,913,313**
4,128,317,717	**4,590,046,543**	**மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புகள்**		**4,489,117,775**	**4,016,526,577**

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்
2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான

விபரமான வருமானத்தின் ஒருங்கிணைந்த அறிக்கை

2020			2021	
ஜீஎஸ்எம்பீ ரூபா	குழு ரூபா		குழு ரூபா	ஜீஎஸ்எம்பீ ரூபா
2,025,438,787	2,501,283,383	வருமானம்	3,752,577,431	2,999,814,453
77,637,587	92,757,085	ஏனைய வருமானம்	87,367,815	64,741,549
(650,901,099)	(1,071,335,505)	தொழிற்பாட்டு செலவினங்கள்	(1,326,099,355)	(672,882,796)
(517,266,955)	(644,459,521)	நிர்வாக செலவினங்கள்	(585,094,263)	(492,011,335)
934,908,320	**878,245,442**	**தொழிற்பாட்டு இலாபம்**	**1,928,751,627**	**1,899,661,871**
(5,525,422)	(5,765,578)	நிதிக் கிரயம்	(4,655,790)	(4,319,059)
143,082,794	143,082,794	தேறிய நிதி வருமானம்	165,836,217	165,836,217
1,072,465,692	**1,015,562,658**	**வரிக்கு முந்திய இலாபம்**	**2,089,932,054**	**2,061,179,029**
298,780,512	285,168,061	வருமான வரி செலவினங்கள்	525,465,700	508,222,272
773,685,180	**730,394,597**	**வருடத்திற்கான இலாபம்**	**1,564,466,354**	**1,552,956,756**
		இலாபம் உடைமையாக்கத்தக்கது		
773,685,180	744,824,791	உரிமையாளர்கள் (ஜீஎஸ்எம்பீ)	1,560,629,821	1,552,956,756
-	(14,430,195)	கட்டுப்படுத்தப்படாத அக்கறை	3,836,532	
773,685,180	**730,394,596**		**1,564,466,354**	**1,552,956,756**

2021 டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமையாண்மையில் மாற்றங்கள் பற்றிய கூற்று

குழு	திரட்டு நிதி ரூபா	திணைக்கள நிதி ரூபா	மூலதன நிதி ரூபா	மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா	பிடித்துவைத்த வருவாய் ரூபா	கட்டுப்படுத்தப்படாத அக்கறை ரூபா	மொத்தம் ரூபா
முன்கொண்டு வரப்பட்ட 2021 சனவரி 01 இல் நிலுவை	27,652,883	1,746,726	68,916,655	305,782,596	2,374,787,911	83,227,336	2,862,114,107
பங்குகள்	-	-	-	-	-	2,000,000	**2,000,000**
வருடத்திற்கான இலாபம்	-	-	-	-	1,560,629,822	3,836,532	**1,564,466,354**
வருடத்திற்கான மீள்மதிப்பீட்டு உபரி	-	-	-	17,241,822	-	-	**17,241,822**
	-	-	-	-			
வருமானம் - கடந்த வருடத்திற்கான சீராக்கல்	-	-	-	-	41,863,533	6,625,928	**48,489,461**
மொத்த வருமானம்	**27,652,883**	**1,746,726**	**68,916,655**	**323,024,418**	**3,977,281,266**	**95,689,796**	**4,494,311,743**
	-	-	-	-			
திறைசேரிக்கு மாற்றி அனுப்பப்படுதல்	-	-	-	-	(2,000,000,000)	-	**(2,000,000,000)**
பங்கிலாபங்கள்	-	-	-	-	-		**-**
செலவுகள்- கடந்த வருடத்திற்கான சீராக்கல்	-	-	-	-		-	**-**
2021 டிசெம்பர் 31 இல் நிலுவை	**27,652,883**	**1,746,726**	**68,916,655**	**323,024,418**	**1,977,281,266**	**95,689,796**	**2,494,311,743**

புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம்
2021 டிசெம்பர் 31 ஆம் திகதியில் காசுப் பாய்ச்சல் கூற்று

2020			2021	
ஜீஎஸ்எம்பீ	குழு	விபரம்	குழு	ஜீஎஸ்எம்பீ
ரூபா	ரூபா		ரூபா	ரூபா
1,072,465,693	**1,029,175,108**	வரி மற்றும் வட்டிக்குப் பின்னர் மீன்டெழும் செலவினங்கள் மீதான மிகை அல்லது வருமானம்	**1,564,466,354**	**1,552,956,756**
-	-	வருமான வரி	17,243,428	-
